[illegible] பொழில்

# சர்வோதயம்

மலர் 4. [illegible] 1944

8. ஆக 1944.

JL
LCM 211, N41 TM
N44. 4. 1-4, 81
218667

71

Regd. M. No. 4565

371

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE).


| மலர் 4 | ஜனவரி 1944 | இதழ் 1. |
| --- | --- | --- |


1357

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

…ங்காடு. வடிவேலு முதலியார்.

REGISTRAR OF BOOKS
3 MAR1944
MADRAS

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார்: சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

நிகழ்ச்சிகள்

## மாகாண L. I. M.களின் 13-வது மகாநாடு

மேற்படி மகாநாடு, டாக்டர் வி. டி. ஜகதீசன், எல். ஐ. எம். (வேலூர்) அவர்களின் தலைமையில் பெஜவாடாவில், 12—2—44ல் நடைபெறும். அம் மகாநாட்டைத் திரு. பி. வி. ரெட்டி அவர்கள் தொடங்கி வைப்பார். காட்சிச் சாலையை டாக்டர் பி. வி. கிருஷ்ண ராவ் திறந்து வைப்பார். ஆராய்ச்சிப் பகுதிக்கு டாக்டர் ஜி. ஸ்ரீநிவாசமூர்த்தி அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

218667
சென்னை-600 ...

## தமிழ் மருத்துவப் பொழிலின் மூன்றுமாண்டு நிறைவு விழா

[illegible] வரி 5௳ கீழ்ப்பாக்கம் இந்திய மருத்துவக் கலாசாலையில் மாலை 5-மணிக்கு நடைபெறும்.

அவ்வமயம் இராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள் தலைமை வகிப்பார்கள். திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் ஜே. என். இராஜரத்தினம் முதலியோர்கள் பேசுவார்கள்.

## மறைவு

திரு. டி. கே. சிவசாமி அவர்கள் எல். ஐ. எம். (கோபிசெட்டி-பாளையம்) இம்மண்ணுலகை நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு மனமுருகுகின்றோம்.

எங்களுடைய பிரிவாற்றாமையைப் பொழில் மூலமாக அன்னாருடைய உற்றார் உறவினர்கட்கும் பொழில் சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்:
கோ. துரைராசன்,
பொழிற்றலைவர்.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 | ஜனவரி 1944 | இதழ் 1

## ஆயுள்காலம்

மாங்காடு—வடிவேலு முதலியார்.

பாய்ந்தமு னஞ்சோடிற் பாராயுளு நாறாம்
பாய்ந்தபி னாலோடிற் பார்வய தெண்பதாம்
பாய்ந்திடும் வாயு பகுத்தறிந் தவ்வகைப்
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே.

(க-ரை) இச்செய்யுள் ஈண்டு, ஆண், பெண்கலவியில் ஆணின் சரஞ்செல்லும் அளவைக்கொண்டு வாழ்நாளின் அளவைக் கூறுகின்றது.

(சொ-ரை) பார்முன்-பிருதிவிபூதம் முதற்கொண்டு, அஞ்சு-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிலும், பாய்ந்தோடில்-இடகலையிலாவது, பிங்கலையிலாவது சரஞ்சென்று ஓடினால், நூறு ஆயுள் ஆம்-(ஆண்டுச் சூலுண்டாய்ப் பிறக்கின்ற குழந்தை ஆணானாலும், பெண் ஆனாலும் அதற்கு) (வயது) நூறாண்டுகளாகும்; பின்-பிருதிவி பூதத்திற்குப் பின்னுள்ள, நால்-அப்புபூதம் முதற்கொண்டு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் நான்கு பூதங்களிலும், பாய்ந்து ஓடில்-(இடகலையிலானாலும், பிங்கலையிலானாலும்) சரஞ்சென்று ஓடினால், பார்-இந்நிலவுலகில் (வாழ்ந்திருக்கக்கூடிய), வயது எண்பதாம்-வாழ்நாள்கள் எண்பதாண்டுகளாகும்; (ஆகையால்) பாய்ந்திடும் வாயு-(இரேசகபூரகமாகப்) பாய்கின்ற சரத்தின் (வகை விரிகளை) பகுத்து அறிந்து-ஆராய்ந்தறிந்து, அவ்வகை-அவ்வாராய்ச்சியில் ஏற்படும் விதிப்படிப் பழகி, பாய்ந்திடும்-அச்சரத்தின் வழியே செல்லுகின்ற, யோகிக்கு-யோகவழக்கம் உள்ளவனுக்கு, பாய்ச்சலும் ஆம்-தன் விருப்பப்படி சரத்தை ஏற்றலும், இறக்கலும், மாற்றலும், அவற்றின் பயனைப் பல்லாண்டு வாழ்தலும், வெளியிற் பாய்ந்து செல்லுமான தொழில்கள் கைகூடுவனவாம்.

(பொ-ரை) கல்வியில் இடகலையிலானாலும், பிங்கலையிலானாலும், பிருதிவிதொட்டு ஐந்து பூதங்களிலும் சரம் செல்லுமானால் அப்பொழுது கருவாய்ப் பிறக்கும் குழந்தைக்கு நூறாண்டுகளாகும்; அப்புதொட்டு நான்கு பூதங்களிலும் சரஞ்செல்லுமானால் அப்பொழுது கருவாய்ப் பிறக்குங் குழந்தைக்கு எண்பது ஆண்டுகளாகும். ஆகையால், இரேசக, பூரகமாகச் செல்லுகின்ற சரத்தின் வகை, விரிகளை ஆராய்ந்தறிந்து அவ்வாராய்ச்சியில் ஏற்படும் விதிப்படி பழகிச் சரஞ்செல்லும் வழியே செல்கின்ற யோக வழக்கமுள்ளவனுக்குத் தன் விருப்பப்படி சரத்தை ஏற்றலும், இறக்கலும், மாற்றலும், அவற்றின் பயனாகப் பல்லாண்டுகள் வாழ்தலும், வெளியிற் பாய்ந்து செல்லலுமான தொழில்கள் கை கூடுவனவாம்.

உம்-உயர்வு சிறப்பு. ஏ-அசை.

பாய்ந்துமுன் அஞ்சோடல், பாய்ந்து பின்னாலோடல் என்னும் இவற்றின் விளக்கங்களாவன:—

சரம் என்பது உயிர்க்காலின் இயக்கம் (பிராணவாயுவின் இயக்கம்) அது மூக்கின் இரண்டு தொளைகளின் வழியாக உள் நுழைதலும் வெளிச் செல்லலுமாக விருக்கும்; இம் மூக்குத் தொளைகளில் இடது பக்கத்தொளை இடகலை எனவும், வலது பக்கத்தொளை பிங்கலை எனவும் சொல்லப்படுவன; இவ்விடகலை, பிங்கலைகளாகிய இரண்டு தொளைகளிலும், ஒரே காலத்தில் மூச்சு உள் நுழைதலும், வெளியிற் செல்லலும் நிகழ்வதில்லை. ஒவ்வொரு மூக்குத் தொளையிலும் ஐந்து நாழிகை என்னும் ஆங்கில இரண்டு மணி நேரந்தான் மூச்சு நடக்கும்; அவ்வாறு நடப்பதும், திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் இடது மூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணியிற் றொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறிமாறி நடக்கும். இதனை,

"வெள்ளி வெண்டிங்கள் விளங்கும் புதனிடம்" என்றும்;
"வெள்ளி புதனொடு திங்களிடமெனத்
தள்ளு மின்கால சரம்" என்றும் புகன்றிருப்பவற்றால் அறிதல் வேண்டும்.

செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் வலது மூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணியிற் றொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறி மாறி நடக்கும்.

வியாழக்கிழமையில் வளர்பிறையில் இடது மூக்குத் தொளையிலும், தேய்பிறையில் வலது மூக்குத் தொளையிலும் விடியற் காலையில் நான்கு மணியில் தொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையில் மாறி மாறி நடக்கும்.



இவ்வாறு இடகலையாகிய சந்திரனில் நடந்தாலும், பிங்கலையாகிய சூரியனில் நடந்தாலும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிலும் பாய்ந்தே நடக்கும்.

அவ்வாறு நடந்தால் பிருதிவியில் ஒன்றரை நாழிகையும், அப்புவில் ஒன்றேகால் நாழிகையும், தேயுவில் ஒரு நாழிகையும், வாயுவில் முக்கால் நாழிகையும், ஆகாசத்தில் அரை நாழிகையுமாக ஐந்து நாழிகையாகிய இரண்டு மணி நேரம் நடக்கும். இதனை,

"மண்ணுக்கங் கொன்றரை நாழிகையப்பு வருமொன்றுகால்
நண்ணுற்ற நாழிகை யங்கியி லேயொரு நாழிகைசேர்ந்
தெண்ணுற்ற நாழிகை முக்காலில் வாயுவுக் கெய்துமரை
விண்ணுற்ற நாழிகை வாயுசஞ் சாரம் விளம்பிடிலே" என்னுஞ்
செய்யுளாலறிக.

இவ்வாறு வாயு நடந்தாலும் பிருதிவி முதலியவற்றில் நடப்பதன் குறியை நன்கு தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. அது,

பிருதிவியில் ஒன்றரை நாழிகை மூக்குத் தொளையில் வாழும் வாயு மூக்குத் தண்டில் தாக்கிக் கொண்டும், அப்புவில் ஒன்றேகால் நாழிகைக் கீழ்ப்பக்கமாக இறங்கியும், தேயுவில் ஒரு நாழிகை மேற்பக்கமாக ஏறியும், வாயுவில் முக்கால் நாழிகை மூக்குத் தண்டுக்கு அருகாகவும், ஆகாயத்தில் அரை நாழிகை எதிலும்படாமல் நேராகவும், ஓடும் என்று உணரவேண்டும். இதனை,

"அண்டத் தக்கினி கீழப்பாம் அருகே யோடில் வாயுவதாம்
தண்டிற் றட்டில் பிருதிவியாம் தானே யோடி லாகாசம்"
எனவும்;

"இருந்த பிராணனு முள்ளே யெழுமாம்
பரிந்தவித் தண்டுட னண்டம் பரிய
விரிந்த வப்புவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே" எனத் திருமூலர் திருமந்திரத்திலும்,

"பார்க்குங்கா லிடமெனினும் வலமெனினு மொக்கும்
பஞ்சபூ தத்தியக்கம் பகருங் காலை
சாற்றியதண் டுடன்சேரிற் பிருதிவி யாகும்
தப்பாம லப்புவுக்குத் தாழ வோடும்
மேற்றிசையை நோக்கி யெழு மங்கிவாயு
மெய்யுணர்ந்தோர் புறத்தோடு மேன்மை குன்றா
நீர்த்துரையா நாற்றிசையுஞ் சிதறி யோடல்
நெடுவானென் றுரைத்திடுநீ நிலைத்து ளோர்க்கே" எனஞான
சரநூலில் புகன்றிருத்தலாலறிக.

ஏண்டுப், பிருதிவி முதல் ஐந்து பூதங்களிலும் சரஞ்செல்லத் தரித்த குழவிக்கு நூறாண்டென்றும், அப்புமுதல் நான்கு பூதங்களிலும் சரஞ்செல்லத் தரித்த குழவிக்கு எண்பதாண்டுகளென்றும், 'பாய்ந்து மூனஞ்சோடில்' என்னும் முதற் குறிப்புள்ள முதற் செய்யுள் கூறுகின்றது.

அஃது, அடியிற் கூறப்படுஞ் செய்யுளால் ஆண்டுத்தொகை பிழைபடுகின்றது.

மருவுமிந் நாழிகை யைந்துக் கிடம்வலம் வாயு மன்னும்
இருபது மாவொரு நாழிகை யாக விசையுமைந்தில்
புரிவது நூறொரு மாவுக் கொருவய தாய்ப்புகன்ற
விரிவில் மனித வயதாயிற் றிந்த வியனறியே.

(க-ரை) இச்செய்யுள் நாழிகைக்கு இத்தனை மா வென்றும், மா ஒன்றுக்கு ஓராண்டென்றுங் கூறுகிறது.

(சொ-ரை) மருவும்-பொருந்திய, இ-இந்த, நாழிகை ஐந்துக்கு-ஐந்து நாழிகைக்கு, வாயு-உயிர்க்காலானது, இடம்வலம் மன்னும்-இடகலையிலும், பிங்கலையிலுமாகச் செல்லும்; ஒரு நாழிகை-ஒரு நாழிகைக்கு இருபதுமா ஆக இசையும்-இருபதுமா ஆகும், ஐந்தில்-ஐந்து நாழிகைக்கு, புரிவது நூறு-நூறுமா ஆகும்; ஒரு மாவுக்கு-ஒரு மாவுக்கு; ஒரு வயது ஆய்-ஓராண்டாகி, நூறு மாவுக்கு-நூறு மாக்களுக்கு, நூறு வயது ஆய்-நூறாண்டுகளாய், புகன்ற-சொன்ன, விரிவில்-விரியால், மனித வயது-மனிதர்களுடைய வயது, ஆயிற்று-நூறாண்டுகள் ஆயின; இந்தவியன்-இந்தப் பெருமையை, நீயறி-மருத்துவ மாணவனே நீ அறிந்து கொள்வாய் (எ-று.)

(பொ-ரை) நாழிகை ஐந்தில் உயிர்க்காலானது இடமும் வலமுமாக மாறும்; நாழிகை ஒன்றுக்கு இருபதுமா ஆகும்; மா ஒன்றுக்கு ஒரு ஆண்டாகும். அவ்வாறுதலால் நாழிகை ஒன்றுக்கு இருபது மாவாக (இருபது ஆண்டுகளாக,) ஐந்து நாழிகைக்கு நூறாண்டுகள் ஆகின்றன.

இஃது இவ்வாறிருப்பதால் 'பாய்ந்து பின் நாலோடில்' என்பது பிருதிவியை நீக்கி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், என்னும் நான்கில் செல்லுங்கால் குழவிதரித்தால் என்னும் பொருளாகின்றது.

அப்பொழுது பிருதிவியின் காலமாகிய ஒன்றரை நாழிகையையும் அதற்குரிய முப்பது மாவையும் கழிக்கவேண்டும். அங்ஙனம் கழித்தால் எழுபது ஆண்டுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறின்றி ஐந்து நாழிகையில் நான்கு நாழிகை ஓடினால் என்று பொருள் கொள்வோமானால், நாலிருபது என்பது ஆண்டுகள் என்று கொள்ள இடமிருக்கிறது. அப்பொழுது இன்ன பூதத்தில் இத்தனை நாழிகை ஓடவேண்டும் என்றும், அவ்வப் பூதங்களில்



ஓடுவதைத் தெரிந்துகொள்ள இடக் குறிகளையும் கூறியிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றிப் பூதங்களுக்கு நாழிகையளவு புகன்றிருப்பதால் அக்கணக்கின்படி பார்ப்பளவில் "பாய்ந்து பின் நாலோடில் பார்வயதெழுபதாம்" என்று பாடம் இருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

இஃது இவ்வாறிருக்க இதுகாறும் திருமூலர் திருமந்திரம் 3000 அச்சிட்டு வந்தவர்கள் "பாய்ந்தபின் நாலோடில் பார்வய தெண்பதாம்" என்று அச்சிட்டு வந்துள்ளார்கள்.

---

## சவ்வீரம் (வீரம்)

Dr. R. தியாகராஜன், L.I.M.

3 MAR1944

இப்பொருள் மீனாக்ஷிமைந்தன், கொச்சிவீரம், பூவீந்து, சேகங்கள், சரக்குச் சுண்ணம், பரங்கிப் பாஷாணம், சாரத்தின் சத்துரு, பறிமித்துரு என்ற பல்வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது. பாஷாண வகைகள் அறுபத்துநான்கில் இயற்கையில் கிடைக்கக் கூடிய பாஷாணங்களிலொன்று வீரம், தற்காலம் கடைகளில் கிடைக்கக் கூடியதும், இரசம் சேர்ந்த வைப்புப் பாஷாண வகைகளிலொன்றுமாகியது சவ்வீரம், மன்மதனின் சங்கார காலத்துச் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து நெருப்புப்பொறி சூதமிருந்த விடத்தில் படக்கொழுந்து படர்ந்தாற்போல் வளர்ந்து வீரமாயிற்று என்றும், கொடிய நஞ்சென்றும், வாயில் இரசமணியிட்டுச் சென்று கைலாசத் தருகே சூழ்ந்த மலைகளில் உற்பத்தியாகின்ற இச்சரக்கை மான் தோலில் எடுத்துக் கட்டவேண்டுமென்றும் இதன் பிறப்பு வரலாறு கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றை நோக்குமிடத்து நமக்கு எளிதில் கடைகளில் கிடைப்பதும், நம்மால் கையாளப்பட்டும் வருகின்றதுமாகியபொருள் இயற்கை வீரமன்று, சவ்வீரமே யாகுமென்பதும், சவ்வீரத்தையே வீரமென்று வழங்கி வருகின்றோம் என்பதும் வெளிப்படை. சவ்வீரத்தைக் களங்கு, செந்தூரம் இவைகளுக்குத் தங்க வீரத்தைக் கொடுப்பதினால் வீரமென்று வழங்கினர்போலும். இதனை முதற் குறையென்றும் கொள்ள இடமிருக்கின்றது. நிற்க, மேனாட்டார் சவ்வீரத்தை ஏழாம் நூற்றாண்டில் கண்டுபிடித்தனர். இதனைப் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில்தான் கிரந்தி நோயில் மருந்தாக முதன் முதலில் பிரயோகித்தனர். நம் முன்னோர் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சவ்வீரத்தின் வைப்பு முறைகளையும், அதனைக் கொண்டுசெய்யும் பல்வகைப்பட்ட மருந்துகளையும், அவைகளைப் பல்வகைப்பட்ட நோய்களுக்குப் பிரயோகம் செய்யும் முறைகளையும் கண்டுபிடித்து மிகவிளக்கமாகக் கூறியிருக்கின்றனர். இதனைக் காய்தல் உவத்தலின்றி ஆராயின் தெள்ளிதின் உணரலாம்.

## சவ்வீரம் செய்முறை

சவ்வீரம் செய்கின்ற முறைகள் பலவற்றில் ஒன்றைக் கீழ்க் கூறுவாம்.

பூரம் 80, கறியுப்பு 80, துருசு 40, படிகாரம் 20, பொட்டிலுப்பு 20, பூநீறு 20, அன்னபேதி 10, நவாச்சாரம் 5, என்னும் நிறையாக இவைகளை நிறுத்தெடுத்து அரைத்துக் குப்பியிலிட்டு மூடி, சீலைமண் செய்து, எரித்து, இறக்கிக் குளிர்ந்த பிறகு பார்க்கையிட்டால் மூடிமேல் அடையாய் வீரம் படிந்திருக்கும்.

## சவ்வீர சுத்தி

இப்பொருள் கொடிய நஞ்சாதலின் அளவில் சிறிது அதிகப்படினும் நஞ்சாகிக் கொல்லும். இதனைத் தூய்மைசெய்தே கையாளல் வேண்டும். இதனைத் தூய்மை செய்யும் முறைகள் சிலவற்றைக் கீழ்க் கூறுவாம்.

ஒருபலம் வீரக்கட்டிக்கு மிளகுக் குடிநீர்விட்டு ஆறுமணி நேரம் சுருக்குக் கொடுத்துப் பிறகு மிளகுக் கல்கத்திற்குள் வைத்து ஒரு பாண்டத்தில் ½ படி கறியுப்புடன் 1 பலம் சூடனைக் கலந்து அதற்குள் மேற்படி வீரத்தைப் புதைத்து சில மணிநேரம் சிறு தீயால் எரித்து எடுப்பது.

### வேறு

இளநீரில் சிறிது சூடனைக் கலந்து ஒரு பானையிலிட்டு வீரத்தைத் துலாயந்திரமாக நீரில் படாமல் ¼-மணி நேரம் எரித்து எடுத்தல்.

### வேறு

படிகாரம் 1 பலம், சூடன் 1 பலம் இரண்டையும் பொடித்து வைத்துக்கொண்டு வீரக்கட்டிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக கிராசம் கொடுத்து எடுத்தல். கிராசம் கொடுக்கும்பொழுது வீரம் புகையா வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

### வேறு

சவ்வீரத்தை ஒரு பீங்கானிலிட்டு அது முழுகும்படி முலைப்பால் விட்டு வெய்யிலில் பால் முழுதும் சுண்டும்வரை உலர்த்தியெடுத்துக் கொள்ளல். முலைப்பாலுக்குப் பதிலாகப் பசுவின் பாலையுபயோகிப்பதும் உண்டு.

### வேறு

பாகற் காயைப் பிளந்து நடுவில் சவ்வீரக் கட்டியை வைத்துக் கயிற்றால் கட்டித் துலாயந்திரமாக நீரில் முழுகாமல் இளநீர் அல்லது பழச் சாற்றில் 1-மணி நேரம் எரித்து எடுத்தல் என்னும் இவைகளும், இவைபோன்ற பிறவுமாம்.



## சவ்வீரத்தின் சுவையும், செய்கையும்

இதற்குக் கார்ப்பு, உப்புச் சுவைகளும், வெப்ப வீரியமும், கார்ப்புப் பிரிவும் உண்டென்று கூறுவர் முன்னோர், இதற்கு வியாதாபேதகாரி, கிருமிநாசனி, அழுகலகற்றி, புண்ணுண்டாக்கிச் செய்கைகள் உள்ளன.

இதன் பொதுப் பண்பினைக் கீழ்க்கண்ட செய்யுளால் உணர்க.

குன்மமொடு குட்டங் கொடியவனி லத்திரட்டு
துன்மாங் கிசப்பெருக்கஞ் சூலைநோய்—வன்மையுறு
காமியப்புண் ணாதியநோய் கண்டாற்சவ் வீரனெனுஞ்
சாமிநா மத்தையுச் சரி.

(பொ-ரை) சவ்வீரத்தினாமத்தை உச்சரித்தாலே, குன்மம், குறைநோய், தீங்கை விளைவிக்கின்ற மகா வாதரோகங்களின் கூட்டம், துர்மாமிச வளர்ச்சி, சூலைநோய்கள், வன்மை பொருந்திய ஸ்திரீ போகத்தினால் விளைகின்ற (கொறுக்கு, அரையாப்பு முதலியன) புண்கள் என்னும் இவை நீங்குவனவாம்.

இதனைப் பலவகைப்பட்ட கண்ணோய்களில் உபயோகிக்கின்றனர். இவ்வுபயோகத்தினை விளக்கமாகப் பின் கூறுவாம்.

## சவ்வீரத்தின் அளவு

இதனை 1/32 உளுந்தெடையிலிருந்து 1/16 உளுந்தெடைவரை உபயோகிக்கலாம், மேற்படி நஞ்சாம்.

## உபயோகிக்கும் வகைகள்

வீரஜெயநீர் :—வீரம், நவாச்சாரம் வகைக்கு 10 உளுந்தெடை நிறுத்துச் சுத்த நீர் ¼ புட்டியில் கலந்து கரைத்துக் கொள்ளவும். இதனை 30 துளிவரை கொடுக்கலாம். (பைஷச கல்பம்.)

## மகாவீரமெழுகு

வீரம் பலம் 1-க்கு 1 படி முருங்கைப்பட்டைச் சாற்றைச் சுறுக்குக் கொடுத்து, அதனுடன் பூரம் பலம் 1, இலிங்கம் பலம் 1, சுத்தி செய்து சேர்த்து முக்கடுகு வகைக்குப் பலம் 1, சித்திரமூல வேர்ப் பட்டை பலம் 6, ஆகமொத்தம் 12 பலத்தைச் சேர்த்து வேண்டிய அளவுதேனும் முலைப்பாலும் விட்டரைத்துக் கடைசியில், குங்குமப் பூ, கோரோசனம், பச்சைக் கர்ப்பூரம் வகைக்கு 1 வராகனெடை சேர்த்து மெழுகாக அரைத்துக் கொள்ளவும்.

அளவு :—1 முதல் 2 பயறளவு.
தீரும் நோய் :—வாத நோய், மேக ரோகங்கள்.
பத்தியம் :—பாலும் சோறும்.

குறிப்பு :—மகாவாத ரோகங்களில் மலத்தைக் கழிக்க வேண்டியிருப்பின் வாளம் சேர்த்த "மலங்கழிக்கும் வீர மெழுகை" ஆள்வது பழக்கத்திலிருக்கிறது.

## வீரமாத்திரை (திரிதோட மாத்திரை)

### என்னும் முக்குற்ற மாத்திரை

### வெண்பா

*மிளகு நால் வீரமொன்று விழ்த்தரையக் காய்நீர்*
*மிளகள வுருண்டை விரவித்—தளராமல்*
*முத்தோட முண்டானால் மூட்டொன்று தக்கபடி*
*முத்தோட மாத்திரையா முன்.*

(பொ-ள்) சுத்தித்த வீரம் ஒரு பங்கு, மிளகு நான்கு பங்கு இரண்டையும் மிளகுக் குடிநீரினால் நன்றாயரைத்து மிளகளவாக உருண்டை செய்து உலர்த்தித் தக்கவனுபானங்களில் கொடுத்து வர முத்தோடங்களினால் உண்டாம் (சுரம் முதலிய) பிணிகள் நீங்குமென்பதாம்.

குறிப்பு:—மிளகுக் குடிநீருக்குப் பதிலாக நொச்சிச் சுரசம்விட்டு அரைக்கின்ற பழக்கமும் இருக்கின்றது. இதனால் மூக்கு நீர்ப்பாய்ச்சல், குளிர்ச் சுரம் முதலியன நீங்கும் என்று கூறுவர்.

## சவ்வீர செந்தூரம்

சவ்வீரம், வெங்காரம் இவ்விரண்டையும் சமவெடை எடுத்துப் பொடித்து அகலிலிட்டு நெருப்பில் வாட்டச் செந்தூரமாம்.

தக்க வளவு, அனுபானத்தில் கொடுக்க, சுரம், சன்னி, பிதற்றல், வலிமையுள்ள வாத நோய்கள், வாந்திபேதி, சூலை முதலிய பிணிகள் நீங்கும்.

## சவ்வீரக்கட்டு

ஒரு அகலில் 1 பலம் கர்ப்பூரத்தையிட்டு அதன்மேல் ஒரு பலம் சவ்வீரத்தையிட்டு மேலும் ஒரு பலம் கர்ப்பூரத்தைத் தூள் செய்து மூடிச் சீலைசெய்து லகுபுடமிட்டெடுக்கக் கட்டாம்.

## வீர ரச பற்பம்

வீரம் 10 பங்குடன் தண்டவாளப் பொடி 2 பங்கு சேர்த்தரைக்க இரசத்தை வீரம் கக்கிடும். மேற்படி ரசத்தை, ஒரு சட்டியில் உப்பிட்டு அதில் வைத்து மேல் மூடிச் சீலைசெய்து உலர்த்தி எரித்திட வெள்ளையாய் நீறும், சுரண்டி எடுத்துக் கொள்ளவும். அளவு:- பணவெடை என்று கூறியிருப்பினும் மிகவும் குறைந்த அளவிலே நோய் வன்மைக்குத் தக்கபடி வெல்லத்தில் அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.

## வீரநீர் (வெளியாட்சிக்கு)

வீரம் கிரெயின் ஒன்றுக்கு எட்டு அவுன்ஸ் நீர்விட்டுக் கலக்குவதே வீரநீர். பூச்சிகளைக் கொல்லவும், விரணங்களைக் கழுவவும் உபயோகிக்கலாம்.



## வீரக்களிம்பு (விரண முண்டாக்க)

வீரம் 1 வராகனெடையை ½ பலம் வெண்ணெயிலரைத்து மேகத்தால் சொரி சொரியாகவும், புள்ளி புள்ளியாகவும், உலகத்தார் வண்டுகடி என்று சொல்லப்படுவதான புண்களின்மேல் பூச ரணமாகும்.

## வீரக்குழம்பு (அமிர்தமெழுகு-அமிர்தவெண்ணெய்)

ஒரு கழஞ்சு (1¼ வராகனெடை) சவ்வீரத்தைப் பொடித்துக் கால்படி வெண்ணெயிலிட்டு நன்றாக இரண்டு சாமம் அரைத்து நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும். இதனைப் பிளவை, மார்பில் ஆணி, புண் இவைகளுக்குச் சீலையிலிட்டுப்போட்டுவர குணமாகும். புண்களைப் புளியிலையிட்டுக் காய்ச்சிய காடிநீரினால் கழுவிவரவும். அன்றியும் இதனை வீக்கங்களுக்கும், கண்டமாலைக்கும். விரணங்களினால் உண்டாம் நெறிக்கட்டுக்கும், அரையாப்பிற்கும் மேலே தடவி வருவதும் பழக்கத்தில் இருக்கின்றது. இதனை ஆசன வாயில் தடவிவர வெளிமூலமும் ஆசனத்தில் உண்டாம் தாபிதமும் நீங்கும்.

குறிப்பு:—வீரக்களிம்புக்கும், அமிர்த மெழுகுக்கும் உள்ள வேற்றுமை யாதெனில் பின் கூறப்பட்டதில் வெண்ணெய் அதிகமாக இருப்பதினால் விரணத்தை ஆற்றுகின்றது.

## ஜெயவீர ரணசிங்கிக் கயிறு

புது ஓட்டிலிட்டு நீர் சுண்டும்படி அடுப்பேற்றி எரித்து எடுத்த எண்ணெய் வெங்காரம் வராகனெடை 10, வீரம் வராகனெடை 1, உளுந்தின்மா வராகனெடை 2, இவற்றைக் கல்வத்திலிட்டு மழைநீர் விட்டு அரைத்து மெழுகுபதத்தில் மாத்திரையாக்கி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நாளானால் மாத்திரையின் வெண்ணிறம் பழுப்பேறும் குற்றமில்லை.

அனுபானம்:—சுத்தநீர் ஒன்றேயாம். இக்கயிற்றை ஒரு ஆண்டு பழகவைத்த பிறகே உபயோகித்தல் வேண்டும்.

## உபயோகங்கள்

இம் மாத்திரையை இழைத்துப் பொட்டுப்போல் தடவிவர விரணங்கள், படர்தாமரை, அரிகிரந்தி, சொரிகிரந்தி, பருக்கள், பக்கப்பிளவை, இராஜப்பிளவை, உச்சிப்பிளவை, லிங்கப்புற்று, கண்டமாலை, அழுகண்ணி, கடி, மேகவிரணம், ஆசனக்கிரந்தி, புண்களின், மேலுள்ள கொழுமை முதலியன தீர்வனவாம்.

இதனால் தீரும் கண்நோய்களாவன:—இமைப்பரு, பருமுளை, விரணசுக்கிரன், சுக்கம், படலம், சொரிபில்லம், நீர்ப்பில்லம், கழலை, குவளைவிரைப்பு, கண்சூடு, இமைத்தடிப்பு, இமைச்சிவப்பு, பார்வையை மறைக்கின்ற விரணம், கரையாத பூ, முதலிய நோய்கள் நீங்கும்.

### வீரநஞ்சுக் கூறி குணம்

இஃது இரத்தத்தில் விரைவில் கலந்து விடத்தை விரைவில் விளைவிக்கும். இதனால் களிம்புச் சுவையும், வாய் நீரூறல், வாய், தொண்டை, ஆமாசயம் யாவும் வீங்கிப் புண்ணாதல், வாந்தி, பேதி, இரத்தபேதி, எச்சில் விழுங்கவொட்டாமற்படி தொண்டை நோதல், முகம் வீங்கல், தோல் வெடித்துச் சிலைநீர் வடிதல், பக்கவலி, தாகம், விக்கல், மயக்கம், மூர்ச்சை, வலி முதலியன உண்டாம். அன்றியும் மரண முண்டாம்.

### முறிவு

முறையாகச் சவ்வீர மொய்குழலாய் கொண்டால்
சிறுநெருஞ்சிற் சாறுண்ணத் தீரும்—அறையக்கேள்
நீலிவே ராகுமே நெய்ச்சட்டிச் சாறுமே
பாலிதென்னங் கள்ளும் பகர்.

(பொ-ள்) சிறுநெருஞ்சிற்சாறு, நீலிவேர்ப்பட்டை கல்கம், நெய்ச்சட்டிக் கீரைச்சாறு, தென்னங்கள் இவைகளிலொன்றை நஞ்சின் வன்மைக்குத் தக்கவளவில் நஞ்சு முறியுமட்டும் கொடுக்கவேண்டு மென்பதாம்.

நிற்க, கோழிமுட்டை வெண்கருவைத் தண்ணீர் அல்லது பாலுடன் கலந்து அடிக்கடி கொடுத்து வந்தாலும், இளநீர் அருந்தினாலும் வீரத்தின் நஞ்சு நீங்குமென்ப. இதனை,

அண்டத்தின் வெண்கருவை பாலின்பா லிற்கலக்
துண்டுவர வீரனுரமகலும்—கண்டறிவாய்
ஏணற் கொடியே யிளநீ ரருந்திடினு
மாணப் பெருமை வழுத்து.

என்ற கருவூரார் தண்டகச் செய்யுளால் உணர்க.

---

### தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை அளித்த பெரியார்களின் பெயர்கள்

| | |
|---|---|
| டாக்டர் வி. டி. ஜகதீஸ்வரன், வேலூர் | ரூ. 20—0—0 |
| டாக்டர் பி. வி. எம். குமாரசாமி, வேலூர் | „ 5—0—0 |

4 - FEB 1944

372

Regd. M. No. 4565

3 - MAR 1944

372

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | பிப்ரவரி 1944 | இதழ் 2.

ஆசிரியர் :

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர் :

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press, No. 7, Nallanna Mudaly Street, Royapettah and Published by C. M. Raja Jegatheesan, at Govt. School of Indian Medicine, "Hyde Park" Poonamallee High Road, Kilpauk, Madras.

# தென்னாற்காட்டு ஜில்லா சித்தவைத்திய சங்கம்.

சிதம்பரம் திரு. இராமசாமி செட்டியார் டவுன் ஸ்கூலில் 1943-ம் ஆண்டு டிசம்பர்மீ 22உ சித்த வைத்தியர்களின் கூட்டம் சித்தஞான ஆராய்ச்சியாளர் திரு. எஸ். ஜி. சுந்தரம் பிள்ளையவர்களின் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் சுவாமி சகஜாநந்தா, எம். எல். ஏ., திரு. என். தண்டபாணிப் பிள்ளை, கே. இரங்கநாயகலு செட்டியார், விசுவநாதய்யர் முதலியோர் சித்த வைத்தியத்தின் மேன்மையைப்பற்றிப் பேசினர். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை:—1. தென்னாற்காடு சித்த வைத்திய சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கத்தைச் சிதம்பரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும், 2. அச்சங்கத்திற்கு திரு. எஸ். ஜி. சுந்தரம் பிள்ளையைத் தலைவராகவும், திரு. என். தண்டபாணிப் பிள்ளையை உபதலைவராகவும், டாக்டர் டி. நாகப்பனைச் செயலாள (செக்ரடெரி) ராகவும், தேர்ந்தெடுக்கப் பட்டனர். 3. சங்கத்திற்கென ஒரு கட்டடம் வேண்டி பல தனவந்தர்களைப் பணம் உதவும்படி கேட்பது. 4. மாகாண சித்த வைத்திய மகாநாட்டை அண்ணாமலை நகரில் நடத்தவும், அதற்கு இட வசதி தர, அண்ணாமலை சர்வகலாசாலை நிர்வாகிகளைக் கேட்பது. 5. சித்த வைத்தியக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும்படி அவர்களைக் கேட்பது என்பனவாம்.

---

# சென்னை தமிழ் மருத்துவக் கழகம்

## முதலாண்டு நிறைவு விழா.

1944-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 3-மணிக்கு டாக்டர் என். குப்புசாமி எச். பி. ஐ. எம்., அவர்களின் தலைமையில், புரசைவாக்கத்தில் டாணாதெருவிலுள்ள கார்ப்பரேஷன் பெண் பாடசாலையில் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. திரு. வி. எம். எஸ். சொக்கலிங்கம் அவர்கள் வரவேற்பு கூறியபின், திரு. ம. க. வீரராகவன் அவர்கள் முதல் ஆண்டு அறிக்கையைப் படித்தார். அதில் அக்கழகத்தில் 27 அங்கத்தினர்கள் இருப்பதாகவும், வாராவாரம் கூட்டங் கூடி அதில் டாக்டர்கள் கே. காசிநாதன் எச். பி. ஐ. எம்., வி. எஸ். உத்தமராயன், ஆர். தியாகராஜன், பண்டிட் எஸ். ஆனந்தம் மற்றும் பல பெரியோர்கள் பேசியதாகவும் குறிப்பிட்டிருக்கிறது.

பிறகு தலைவர், கழகத்தின் செயலைப் போற்றியும், அதன் முன்னேற்றத்திற்காகவும், சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்காகவும் நீண்ட சொற்பொழிவாற்றினார். குழந்தைவேலு நாயனார், டாக்டர் பி. கெ. வெங்கடேசம், டாக்டர் வி. எஸ். உத்தமராயன் முதலியோர்கள் பேசினர். சிற்றுண்டி வழங்கி மங்களவாழ்த்துக் கூறப்பெற்று கூட்டம் இனிது முடிந்தது.

# தமிழ்
# மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 பிப்ரவரி 1944 இதழ் 2

அன்புடைய டாக்டர்களுக்கு,

இப்பொழிலைத் தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. மூன்றாமாண்டு நிறைவு விழாவும் 5—2—44ல் சிறப்பாக நடத்தப் பட்டது. இவ்விழவை நேரில் கண்டு களிக்க உங்களால் கூடாமையால் அங்கு நடந்தவைகளைப் புகைப்படம் எடுத்து அச்சிட்டனுப்ப எண்ணினோம். அது இயலாமையால் வருந்துகிறோம். ஆயினும் அங்கு நடந்த சொற்பொழிவுகளை விவரமாக வேறிடத்தில் அச்சிட்டுள்ளோம். அவைகளைப் படித்து இன்புறுக.

இப்பொழில் இன்னும் நன்றாக ஓங்குவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் நன்கொடையோ அல்லது குறைந்தது ஓராண்டுச் சந்தா இரண்டு ரூபாய்களையோ எமக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதனை ஆதரிப்பதால் வரும் நன்மைகளை நீங்கள் வருங் காலத்தில் நன்கு உணர்வீர்களென்று நான் உறுதியாகக் கூறுவேன். நேரில் உங்களைக் கேட்பதாகப் பாவித்துப் பொழிலுக்கு அனுப்பவேண்டிய பழைய பாக்கி, புது சந்தா முதலியவைகளை உடனே அனுப்பவும். இதுகாறும் சந்தாதாரர்களாக இல்லாதவர்கள் எனது வேண்டுகோளைத் தட்டாது, சந்தாவை அனுப்பி எம்மை ஆதரிப்பார்கள் என்ற உறுதியுடன் இதனை எழுதுகிறேன்.

நமது பொழில் நீடூழி வாழவேண்டி வாழ்த்திய திருவாளர்கள் ராவ்பகதூர் டி. எஸ். திருமூர்த்தி, ஆர். பி. சேதுப் பிள்ளை, ஜி. ஏ. சின்னு, சாமாராவ் முதலியோர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொழிலின் பெயர் மிகவும் அழகானதெனவும், மக்களைப்போல அதுவும் போரினால் நலிந்து, மெலிவுற்றதெனவும் பண்டிதரத்தினமாகிய திரு. சேதுப் பிள்ளை கூறினார். அப்போரினால் அன்றி, அப்போரில் சேர்ந்து உழைக்க L.I.M.களுக்கு தக்க பதவியும், வசதியும் அளிக்கப்படவில்லையென்ற வருத்த மேலீட்டினால் அது நலிவும், மெலிவும் உற்றதெனக் கூறலாம். ஆயினும் தமிழ் மருத்துவர்கள் அதனை அன்புடன் வாங்கிப் பயன் படுத்திக் கொண்

டால், அது குளிர்ந்து, செழித்து ஓங்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை. தமிழ் மருத்துவர்களும், L.I.M.களும் தமது குறைகளை அப்போதைக்கப்போது எழுதி, அவைகளைக் களைக்க வழிதேடவும் தமிழ் மருத்துவத்தில் மலிந்துள்ள சிறந்த உண்மைகளை பிறருக்கு எடுத்துக்காட்டி மேன்மை பெறவும் இப்பொழிலைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இங்ஙனமில்லாது வாளாயிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இனியாவது முழுமனதுடன் இதனை ஆதரித்துப் பயன் படுத்திக் கொள்வாராக!

இங்ஙனம்:
கோ. துரைராசன்.
தலைவர்
தமிழ் மருத்துவப் பொழில் காரியாலயம்.

---

## ஓர் ஐய வினா!

### திருமந்திரம் மூன்றாமந்திரத்துள் அந்தணர் ஒழுக்கத்தில் பதினோராவது செய்யுள்

............

"அந்தண்மை பூண்ட பெருமறை யந்தத்துச்
சிந்தைசெ யந்தணர் சேருஞ் செழும்புவி
நந்ததலில்லை நர்பதி நன் றுறும்
அந்தியுஞ் சந்தியு மாகுதி பண்ணுமே."

என்னும் இச்செய்யுள் பல்லாண்டுகளாகப் பல்லோர் பதிப்புக்களிலும் மேற்படி பாடமாகவே காணப்பட்டு வருகின்றது. இப்பாடத்தையே உரை எழுதுவதில் பேராற்றலுள்ளவர்களாகிய நச்சினார்க்கினியர், பரிமேலழகர் என்னும் இருவரும் தழுவி இச்செய்யுளை,

"அந்தண்மை பூண்ட அந்தணர் என்றும்
அருமறை யந்தத்துச் சிந்தை செய்தணர்"

என்றும் முடிவுகட்டி, அந்தண்மை பூண்ட அந்தணர் என்பதைப் பரிமேலழகரும்,

"அருமறை யந்தத்துச் சிந்தைசெய் அந்தணர்"

என்பதை நச்சினார்க்கினியரும் கொண்டு உரை எழுதியிருக்கின்றனர்.

ஈதுணராது சிலர் அப்பாடத்தை,
"அந்தண்மை பூண்ட அறமேவள் ஆகமத்து"
என்று முதலடியை மாத்திரம் மாற்றி யிருக்கிறார்கள். காரணம் தெரியவில்லை.

3 MAR 1944 MADRAS

# தமிழ் மருத்துவப் பொழில் 3-வது ஆண்டு நிறைவு விழா.

—::—

சுபானு ஆண்டு தைத்திங்கள் 23உ (5—2—44) சனிக்கிழமை மாலை 5-மணிக்கு சித்த மருத்துவ மாணவர் கழகத்தினால் நடத்தப் பட்டு வருகின்ற மருத்துவப் பொழிலின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 5-மணிக்கு திரு. இராவ் பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள் மேளவாத்தியத்துடன் மங்களகரமாக வரவேற்கப்பட்டார்.

அவ்வமயம் சித்த வகுப்பு, மற்றைய வகுப்புக்களைச் சார்ந்த மாணவ மாணவிகள், பழைய மாணவ மாணவிகள், மற்றைய கல்லூரியின் தமிழ் ஆசிரியர்கள், சந்தாதாரர்கள், இந்திய மருத்துவக் கலா சாலையின் ஆசிரியர்களும், இந்திய மருத்துவக் கலாசாலையின் முன்னாள் தலைவர் திருவாளர் வைத்தியரத்தினம் காப்டன், ஜி. சீனிவாச மூர்த்தி அவர்களும், தற்போதையத் தலைவர் உபய வைத்தியப்பிரவீண டாக்டர் பி. வி. கிருஷ்ணராவ் அவர்களும் வந்திருந்தார்கள்.

மருத்துவப் பொழிலின் ஆசிரியர் பண்டிட் மா. வடிவேலு முதலியார் உடல் நலமின்மையால் வரமுடியவில்லையென்று வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பியிருந்தார். மேலும் டாக்டர் சாமாராவ் அவர்களிடமிருந்தும், திருவாளர் சின்னு அவர்களிடமிருந்தும் வாழ்த்துக்கள் வந்தன.

இன்னிசை சிறிதுநேரம் நடந்தது. அதன்பிறகு சிற்றுணவு வழங்கி முடிந்தவுடன் திரு. இராவ்பகதூர் டாக்டர் திருமூர்த்தி அவர்களின் தலைமையில் கூட்டம் கூடிற்று. திரு வெங்கடராவ் கடவுள் வணக்கம் கூறினார். சித்த வகுப்பு மாணவர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

தலைவர் தம் முன்னுரையில் அன்னாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு வந்தனத்தைக் கூறி தனது சொற்பொழிவைத் தொடங்கினார்.

அவர் கூறியதாவது:—

"பொழிலை முழுவதும் படிக்க நேரமில்லை ஆனாலும் கட்டுரைகளின் தலையங்கங்களை மட்டும் பார்த்துவிடுவேன் ——— தமிழ்க் கலையானது அநேக ஆயிரம் ஆண்டுகட்கு முன்னால் எவ்வளவு சிறப்பாக இருந்தது என்று தெரிகின்றதோ அதேமாதிரி சித்தவைத்தியமும் அக்காலத்தில் சிறப்பாக இருந்திருக்கவேண்டும். சித்த மருத்துவம் மிகவும் தொன்மையானது. இக்காலத்தில் பலேகன் ஜதாரோ,

ஹராப்பா முதலிய இடங்களில் பூமியைத் தோண்டி எடுத்ததில் கிடைத்த பல அரிய சின்னங்கள் அக்காலத்தில் தமிழ்க் கலையின் உன்னத நிலையை நன்றாக விளக்குகின்றன. சித்த வைத்தியம் இப்போதைய நிலையில் இருப்பதின் காரணம் பல உளதெனினும் முக்கியமாகப் பழைய நூல்களெல்லாம் செல்லரித்துப் போய்விட்டதேயாகும். காலஞ்சென்ற மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே சுவாமிநாதய்யர் இலக்கியத்தின் முன்னேற்றத்திற்காக ஏடுகளைச் சேகரிப்பதில் அரும்பெரும் தொண்டு ஆற்றிவந்தார். அதேபோல் மருத்துவ ஏடுகளைச் சேகரித்து அச்சிட்டு வெளியிடல் மிகவும் நன்று.

இந்திய மருத்துவத்தைப்பற்றி ஒரு அணுவளவுகூடத் தெரியாத மேனாட்டு வைத்தியர்கள், அம் மருத்துவத்தை விஞ்ஞான முறையில் சிறந்ததல்ல, அதை வளர்க்க முயற்சிப்பதால் விஞ்ஞானமே கெட்டுப் போய்விடும் என்று கூறுவது தவறாகும். அது என் மனதிற்கு ஏற்கவில்லை. அதை நான் கண்டிக்கிறேன். இந்திய மருத்துவத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தார் கடமைப்பட்டிருக்கிறார்கள். மற்றைய வைத்தியக் கல்லூரிகளுக்குப் பொருளாதார உதவி செய்வதுபோல் இம்மருத்துவச் சாலைக்கும் செய்திருப்பார்களேயாயின் இந்திய மருத்துவம் அதனினும் மேம்பட்டிருக்கும்.

தற்போது இருக்கின்ற வைத்தியச் சட்டங்களின்படி ஜனங்களுக்கும், வைத்தியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. ஆகலால் திருவனந்தபுரத்தில் ஒரு ஆண்டுக்குள் எல்லா மருத்துவர்களுக்கென ஏற்படுத்தியிருக்கின்ற பொது ரிஜிஸ்டரில் யாவரும் பதிவு செய்துகொள்ள வேண்டும். அப்படித் தவறினால் பிறகு கலாசாலைகளில் படித்துத் தேர்ச்சிபெற்று பட்டம் உடையவர்களே மருத்துவர்களென்று பதிவு செய்துகொள்ளப் படுவார்கள். சித்த மருத்துவக் கலாசாலைகள் அதிகம் இருக்கவேண்டும். வேறு ஒரு தொழிலுமில்லாதவர்கள் தபால் மூலமாக (Homeopathy) ஹோமியோபதி என்ற முறையைக்கற்று மருத்துவம் செய்கின்றனர். அதை நான் கண்டனம் செய்கின்றேன். சித்த வைத்தியர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் இப்பொழிலுக்குச் சந்தாதாரர்களாகவேண்டும். மாணவர்கள் இப்பொழிலை நடத்துவது போற்றத்தக்கது, இக்கலாசாலையின் மருத்துவ ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மேன்மேலும் உதவிபுரிந்து பொழிலை வளர்க்க வேண்டும்.''

பிறகு தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் கீழ்வருமாறு பேசினார்.

''இக்கலாசாலையில் ஆயுர்வேதம், சித்தா, யூனானி ஆகிய நம் நாட்டு மருத்துவ முறைகள் மூன்றும் கற்பிக்கப்படுகின்றன என்பது எம்மனோர்க்கு நீண்ட நாட்களாகத் தெரியும். மூன்று முறைக்கும் மூன்று மூர்த்திகள் வேண்டியதை மருத்துவப் பொழிலின் ஆண்டு



விழாவுக்கு மூன்றும் திரண்ட மருத்துவத் தலைவர் டாக்டர் திருமூர்த்தியை தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இன்றையதினத் தலைவர், நம் நாட்டின் மருத்துவத்தை மதியாமலும், அதன் வளர்ச்சியைத் தடை செய்யவேண்டும் என்னும் நோக்கத்தையுடைய கூட்டத்தாரின் (மேனாட்டு) வைத்தியக்கலையைக் கற்றவர். நம் நாட்டில் பிறந்து, வளர்ந்து, நம்மிடையே பிழைக்கும் பலர் மேனாட்டு மோகம்பிடித்து நம் இந்தியக் கலைகளை அவமதிக்கின்றனர். நம் நாட்டில் பிறந்தவர்களெல்லாம் நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கருதக்கூடாது. இப்பொழுது நடக்கும் யுத்தத்தினால் மேனாட்டு மருந்துகள் அநேகம் கிடைக்காமல் மேனாட்டு வைத்திய முறையில் பழகினவர்கள் திண்டாடுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இம்மாதிரி எத்தனை நாட்களோ? ஆனால் வருங்காலத்தில் நம் நாட்டிற்கு ஏற்ற சிறப்பான நம் இந்திய மருத்துவம் ஒன்றே இந்நாட்டில் பிழைத்திருக்கும் என்பதை உறுதியாகச் சொல்வேன். வருங்காலத்தில் தாய்மொழி கட்டாயம் சிறப்புற்றிருக்கும். அப்பொழுது தமிழ் மருத்துவமும் முன்னணிக்குக் கட்டாயம் வரும். நாட்டிற்கேற்ற வைத்யம் இதுதான் என்று சொல்லுவது நம் நாட்டின் மக்களேயல்லாது அரசாங்கத்தார் அல்ல. மேனாட்டு வைத்திய முறையில் பழகினவர்கள் நல்ல நிலையில் இருப்பது அவர்களுக்கு அரசாங்கத்தாரால் காண்பிக்கப்படும் சலுகையாகும். எவ்விதத்திலும் போலி வைத்தியர்களை ஒழிக்க முயற்சிக்கவேண்டும்.

சித்தர் என்றால் கடவுளுக்கே சித்தர் என்ற பெயருண்டு. எல்லாவற்றிலேயும் சித்தமுடையவர்கள் சித்தர். அவர்களிருந்து தூய்மைப்படுத்திய நாட்டில் நாம் பிறந்திருப்பது ஒரு பெருமையாகும். நாட்டின் தெற்கே பொதியமலை என்று ஒன்றிருக்கின்றது அதனை அகஸ்தியர்மலை என்றும் கூறுவர். அநேகவித மூலிகைகள் அங்கு கிடைக்கின்றன. அகஸ்தியர் வைத்திய நூல்களேயல்லாது இலக்கிய நூல்களும் இயற்றியிருக்கின்றார். ஆனாலும் மருத்துவ நூல்கள் எல்லாம் பரிபாஷையில் உளது. இலக்கிய மாணவர்களுக்கு புரிவது கடினம். ஆதலால் மருத்துவ அன்பர்களும் இலக்கிய அன்பர்களும் ஒன்றுகூடி பழைய நூல்களை வெளியிட்டால் நன்மை உண்டு. அரிய நூற்களும் வெளிவரலாம். மருத்துவ முறையில் மந்திரத்தை உபயோகித்துக் கொடிய நச்சுப் பாம்புகளின் விடங்களை எல்லாம் அகற்றுவது இந்திய மருத்துவத்திற்கே உரியது; மேனாட்டு முறையில் இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம்.

சித்தர்கள் நம் நாட்டில் எல்லாப் பாகங்களிலும் இருந்தார்கள். பழனியில் போகர் இருந்து அங்கு சமாதிநிலை அடைந்ததினால் அவ்வூருக்கு சிறப்பு உண்டாயிற்று.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 | மார்ச் 1944 | இதழ் 3


## தேரர்

### மூலநோய் மருந்துணவு

மாங்காடு—வடிவேலு முதலியார்.

கோரைக்கிழங்கு பறிப்பாரைக் கூப்பிட்டுக்கூப்பிட்டு வாழ்வாரை
பாருற்றவன்மை யழிப்பாரைப் பாலை நிலத்தைப் புரப்பாரை
ஆரார் புசிக்க நினைப்பாரை ஆண்டவரென்று மதிப்பாகி
மோரைச் சுவைதயடைந்தாற்போல மூலப் பிணிவிருதாவாமே.

(க-ரை) இச்செய்யுள் மூலநோய்க்கு மருந்துணவு கூறுகின்றது.

(சொ-ரை) கோரைக் கிழங்கு பறிப்பாரை-கோரைக் கிழங்கைப் பறிப்பவரும், கூப்பிட்டுக் கூப்பிட்டு வாழ்வாரை-நிலத்தைத் தோண்டித் தோண்டி வாழ்பவரும், பாருற்றவன்மை அழிப்பாரை-நிலத்தின் வன்மையைக் கெடுப்பவரும், பாலை நிலத்தைப் புரப்பாரை—பாலை நிலத்தை ஆள்பவரும், ஆண்டவர் என்று மதிப்பு ஆகி-வராகாவதாரம் என்று மதவாதிகளால் நினைக்கப்பட்டவராயிருந்தும், ஆரார் புசிக்க நினைப்பாரை-யார்யாராலும் புசிக்க நினைக்கப்படுபவருமான பன்றியின் தசையை உண்பவர்களுடைய, மூலப்பிணி-மூலநோயானது, மோரை-(புளித்த) மோரை, சுவை-பாலானது, அடைந்தால்போல்-சேர்ந்தால் கெடுவதுபோல், விருதா ஆம்-தன் வன்மையின்றிக் கெட்டு வீணாய்ப் போம், (என்றால்) கெடுதி யடையும் என்றவாறும். எனவே அந்நோய் நீங்கும் என்று அறிந்துகொள்ளவேண்டும்.

"கோரைக் கிழங்கு பறிப்பார்" என்றதை,

திரிபலை சிங்கி திரிகடு போகனி சிந்தூ "மை
அரிநுகர் மூலம்" என்று தேரர் சத்திலேகியத்தில் புகன்றுள்ளதாலறிக.

"கூப்பிட்டுக் கூப்பிட்டு வாழ்வார்" என்றது கிழங்குள்ள இடங்களைக் கோண்டித் தோண்டி நுகர்வது ஈண்டுக் 'கு' எனற்பாலது 'கூ' எனநீண்டது, கு, கூ இரண்டும் பூமியைக் குறித்தது. இதனைக் 'குத்தூள் பட வொத்துப் பொரவல பெருமாளே' என்பதால் அறிதல்வேண்டும்.

அதன்செயலால் மண்ணின் வன்மை கெடலால், 'பாருற்ற வன்மை அழிப்பாரை' எனவும்; தான் வாழும் இடம் எயினர் வாழுமிடமாதலாலும் அவர்கள் பாலை நிலவாசிகளாகலாலும், அந்நிலம் கொடிய வெப்பமுடையதாகலாலும்,

"விழுந்த துளி யந்தரத் தேவீழின் வேமென்
றெழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளோ
பொய்யா மொழிப்புலவன் போல்."

என்னும் வெண்பாவாலும்,

பாலைவனந் தனிலேயொரு-பாதகன் பிறகே-மகள்-
போனவிந்திர சாலமெந்த
வுபாயம் ஒன்றும் அறிந்திலேன்பாவி-
அர்செய்த வஞ்சனையோ
விளையால் விளைந்ததுவோ-அயல்-வீடு கண்டறி-
யாள் கலங்கவனோடி ஏங்க
வுடன்கை தயிங்கேது-பாரமறிந்தவளோ-சொல்-
பிராய மொன்பதலோ
பரிதவி-உந்தியில் நீவிவந்து பிறந்த தென்பாவப்-
பாதை கடுஞ் சுடுமே
மகள் பாதம் என்படுமோ" என்பதாலும்,

பாலை நிலத்தில் ஒரு பொருளும் உண்டாகமாட்டாதாகலான் அவ்விட நிலத்தைத் தோண்டிக் கெடுக்க யாதோர் காரணமுமில்லையாகலான் அதைப் புரப்பாரை எனவும் கூறப்பட்டதாகும்.

---

## தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை அளித்த பெரியார்களின் பெயர்கள்

| | |
|---|---|
| டாக்டர், என். சண்முகசுந்தரம், பொள்ளாச்சி | ரூ. 10—0—0 |
| ,, கே. டி. வேணுகோபால் நாயுடு, சுந்தரபாண்டியம் | ,, 3—0—0 |
| ,, எல். பெரியசாமி, செட்டி குளம் | ,, 3—0—0 |
| திரு. அண்ணாஜி ராவ், சைதாப்பேட்டை | ,, 5—0—0 |

# தமிழ் மருத்துவப் பொழிலின்
# 3-ம் ஆண்டு நிறைவு விழாவின்போது வாசிக்கப்பட்ட
# ஆண்டு அறிக்கை.

அவைத்தலைவர் அவர்களே! பெரியோர்களே!! ஆசிரியர்களே!!! சகோதர சகோதரிகளே!!!!

இம்மூன்றும் ஆண்டு விழாவின்போது "தமிழ் மருத்துவப் பொழில்" என்னும் எமது திங்கள் வெளியீட்டைப்பற்றி, இதனை நடத்தும் தமிழ் மருத்துவ மாணவர் கழகத்தின் சார்பாக யான் சில மொழிகளைக் கூற விரும்புகின்றேன்.

நம் மருத்துவத்திற்குரிய நூல்கள் பல அச்சில் இல்லை யென்பதும், அவ்விதம் அச்சில் இருக்கும் சில நூல்களும் பிழை மலிந்துள்ளனவாக இருக்கின்றன என்பதும் நீங்கள் யாவரும் அறிந்ததே. இதன் பயனைச் சித்த மருத்துவத்தைக் கற்கும் மாணவர்களும், ஆராய்ச்சி செய்பவர்களும், ஆசிரியர்களும் சொல்லொணா இடையூறுகளை அனுபவித்து வந்தார்கள். அவ்வப்போது வரும் ஐயங்களை உயர் திருவாளர் பண்டிட் மாங்காடு-வடிவேலு முதலியார் போன்ற பெரியார்களிடத்தில் நாங்கள் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். ஒருநாள் அப்பெரியார் இதற்கென ஒரு வெளியீடு இருத்தல் நலமெனக் கூறியதை நன்றெனக் கருதி அப்போது இப்பள்ளியின் சித்த வகுப்புத் தலைவரும், சித்த மாணவர் கழகத்தின் தலைவருமாக இருந்த எந்தம் ஆசிரியர் டாக்டர் கோ. துரைராசன் அவர்கள் மற்றைய ஆசிரியர்களையும் கலந்து 1940-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதியன்று, சித்த மாணவர் கழகத்தின் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டித் தம் கருத்தை வெளியிட்டார்கள். மேற்படி கூட்டத்தில் கழகத்தின் வாயிலாக ஒரு திங்கள் வெளியீட்டை நடத்த வேண்டுமென்று தீர்மானித்து, அதனை நடத்துவதற்கு டாக்டர் கோ துரைராசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட காரியக் கமிட்டி ஒன்றை நிறுவி, உயர் திருவாளர் மாங்காடு-வடிவேலு முதலியார் அவர்களையே கௌரவ ஆசிரியராக இருக்கும்படி கேட்டுக் கொண்டோம். நிற்க, இப்பொழிலின் நோக்கங்களை உங்களுக்கு '41-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வெளியீட்டில் தெரிவித்துள்ளோம்.

அரசாங்கத்தாரின் அனுமதி பெறுவதற்குச் சிறிது தாமதம் ஏற்பட்டதால் 1941-ம் ஆண்டின் ஜனவரித் திங்கள் வெளியீடு பிப்ரவரியில் தான் வர முடிந்தது.

இப்பொழிலானது எத்தருணத்தில் தொடங்கப்பட்டது என்பது நீங்கள் யாவரும் அறிந்ததே. இவ்வுலக மகா யுத்தத்தில் ஐரோப்பாவிலன்றி ஆசியாவிலும் ஜப்பானியர் இந்திய நாட்டின் எல்லைக்கே படையெடுத்து வந்த சமயமாகும். மேலும் இப்பொழிலின்

முதல் ஆண்டின் இறுதியிலேயே ஜப்பானிய விமானப் படையெடுப் பிற்கு அஞ்சிச் சென்னைவாசிகளில் பெரும்பாலோர் சென்னையை விட்டுக் கிராமங்களுக்கு ஓடிய சமயமும் அதுவே ஆகும். அக்காலங் களிலெல்லாம் நம் பொழிலானது தாமதப் பட்டேனும் வெளிவந்து கொண்டிருந்ததற்குக் காரணம் டாக்டர் கோ. துரைராசன் அவர் களின் அஞ்சா நெஞ்சமும், தீரா உழைப்பும், ஆரம்ப முதல் இப் பொழிலை வெளியிடுபவராக இருந்து உதவிய டாக்டர் வி. என். சாம ராவ் அவர்களின் தன்னலமற்ற உழைப்புமே யாம். சென்னை வாசி கள் வேறு இடங்களுக்குச் சென்றது போலவே இப்பொழிலை அச் சிடும் அச்சுச்சாலையும் வேறிடத்திற்கு மாற்றப்பட்டது. இதனால் வெளியிடுவோர்க்கு உண்டாய இன்னல்கள் பலவிருந்தும், "என் கடன் மருத்துவப் பணிசெய்து கிடப்பதே" என்பதைத் தமது வாழ் நாட் கொள்கையாகக் கொண்டு இதனால் உண்டாய இன்னல்களை எதிர்த்து, காலந் தாழ்ந்தேனும் பொழிலை வெளிவரச் செய்ததற்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளோம். அவரைப் பற்றியும் அவரது பணியைப் பற்றியும் எவ்வளவு சொல்லினும் மிகையாகாது என்றே நினைக்கின்றோம். 1942-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் 1943-ம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஒரு அச்சு இயந்திரத்தை வைத்துக்கொண்டு எல்லா வேலைகளையும் தாமே சரியாது செய்து பொழிலை நடத்தி வந்த டாக்டர் கோ. துரைராசன் அவர்களின் உத விக்கு என்ன கைம்மாறு செய்வதென்றறிகிலேம். இவற்றிற்குக் கார ணம் அவரிடம் குடிகொண்டுள்ள தாய் மொழிப் பற்றும், தமிழ்க் கலைப்பற்றும், தமிழ் மருத்துவப் பற்றும், தாம் கொண்ட காரியத்தை முடிக்க வேண்டும் என்னும் மன உறுதியுமே யாம்.

மேற்கூறிய உலகப் போரினால் ஏற்பட்ட காகித விலை உயர்வி னாலும், அதிக விலைக்குக்கூடக் காகிதம் கிடைக்காததினாலும், சென்னை யில் ஏற்பட்ட குழப்பத்தினாலும் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நூல்களைப் பொழில் வாயிலாக வெளியிட முடியவில்லை. ஆயினும் "அகத்தியர் இரத்தினச் சுருக்கம்" என்னும் பிழைமலிந்த நூலைப் பிழையற்ற சுத்தப் பதிப்பாக வெளியிட்டுள்ளோம். "பிரமமுனி கருக்கடை" தேரன் "பொருட் பண்பு நூல்" என்னும் நூல்களின் முதற் பகுதிகளை வெளியிட்டுள்ளோம். பிற்பகுதிகளையும் சீக்கிரம் வெளியிடத் தீர்மானிக்கப் பெற்றுள்ளது. இவற்றில் முற்கூறப்பட்ட "கருக்கடை" அச்சில் வந்திருப்பினும், பிரதிகள் கிடைக்காததுடன் மிகவும் பிழைகளை நிரம்பியுள்ளன. அப்பிழைகளை நீக்கிச் சுத்தப் பிரதியாக நாங்கள் வெளியிட்டு வருகின்றோம். பின்னையது இது வரையில் யாவரும் அறியாததும் அச்சில் வராததுமானது. இதனை வெளியிட்ட பெருமை இப்பொழிலையே சாரும். பல சந்தாதாரர் களின் வேண்டுகோட் கிணங்கி இது வரையில் மருத்துவத்தைப் பற் றிச் சுமார் ஐம்பது புதிய கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.



218667 ... 600 008

மேற்கூறிய கட்டுரைகளில் பெரும்பாலானவற்றை எழுதி உத விய பெரியார்கள் தஞ்சை கண் வைத்தியர் அமிருதலிங்கம் பிள்ளை டாக்டர்கள் என். சுப்ரமணியம், ஆர். தியாகராஜன் முதலியவர்கட்கும், ஏனைய கட்டுரைகளை எழுதி உதவிய மற்றைய பெரியோர்கட்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களில் சலியா முயற்சியுடன் தன்னலங் கருதாது திங்கள் தோறும் கட்டுரை எழுதி உதவிய டாக்டர்கள் என். சுப்ரமணியம், ஆர். தியாகராஜன் இவர் களைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இவர்கள் உதவிக்கு நாம் என்றென்றும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டுள்ளோம். மற்றும் நீங்கள் படித்தறிந்தவற்றைப்பற்றியோ அல்லது அனுபவத்தில் கண்டவற்றையோ அவ்வப்போது கட்டுரைகள் எழுதி அனுப்பி எங்க ளுக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்பொழிலானது போரின் காரணத்தால் காகிதம் முதலிய வற்றின் விலை ஏற்றத்தினாலும், பண முடையினாலும் கஷ்டப்பட்ட சமயம் தயாள சிந்தையுடன் நமக்குப் பெரும் பொருளுதவி செய்த இராமச்சந்திரபுரம், டாக்டர் பங்காரு தாஸ் அவர்கட்கும், மற்றும் அவரவர்களாலியன்ற வரை உதவி அளித்த டாக்டர்கள் வி. டி. ஜகதீஸ்வரன், ஜி. எ. சின்னு, பி. வி. எம். குமாரசாமி அவர்கட்கும், நம் தோழர்களாகிய சிங்காரவேலு, சிதம்பரம் முதலியவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களிடமிருந்த உயர்ந்த ஏட்டுப் பிரதிகளை எமக்குத் தந்து, பொழிலில் வெளியிட அனுமதி கொடுத்த பெரியார்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், தமது "யமக வெண்பா விருத்தியுரையை" எமக்கு அளித்த காலஞ்சென்ற வல்லை ஷண்முக சுந்தர முதலியார் அவர்கட்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளோம். மற்றும் தமது "பொருட் பண்பு வெண்பா" என்னும் நூலை அளித்த பண்டிட் வே. ரா. சுந்தரம் பிள்ளை அவர் களின் பெருந்தன்மையைப் பாராட்டுவதுடன் அவர்கட்கு எமது மன மார்ந்த நன்றி உரித்தாகுக.

எமது வேண்டுகோட் கிணங்கிப் பொழிலின் கௌரவ ஆசிரிய ராக இருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தந்தும், பொழிலில் பதிப் பிக்க வருகின்ற கட்டுரைகளிலுள்ள பிழைகளைத் திருத்தியும், பழைய நூல்களில் உள்ள பிழைகளைப் பல ஏட்டுப் பிரதிகளின் உதவியினால் களைந்தும் அச்சிடுவதற்கு உதவி புரிந்து வரும் உயர் திருவாளர் மாங்காடு - வடிவேலு முதலியார் அவர்கட்கு நாம் என்றென்றும் கட மைப் பட்டிருப்பதுடன், தமிழ்த் தாய்க்கும், பொழிக்கும், மருத்து வத்திற்கும், சிறப்பாக இப்பொழிலுக்கும் பணி செய்வதற்காக அவர் கட்கு நரை, திரை, மூப்பு ஆகியவற்றை நீக்கி இளமையை அளிக்கு மாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

பேன் கொட்டையைத் தேங்காய் நெய்யில் இழைத்து மேற்பூசக் கொப்புளங்கள் உடையும். பிறகு கழுவி சிரங்குகளுக்குக் கூறிய மருந்துகளைப் பூசலாம்.

ஆடுதீண்டாப்பாளைக் கற்கத்தைத் தேங்காயளவு எடுத்து வேம்பு நெய் ஒரு வீசையிலிட்டுப் பக்குவமாகக் காய்ச்சி மேலுக்குப் பூசி, ஊறிய பிறகு குளிக்கவும்.

நீரடிமுத்துப் பருப்பு ஒரு வீசை, கொப்பரைத் தேங்காய் அரை வீசை சேர்த்து இடித்து கொதி தண்ணீரில் போட்டு நன்றாய்க் கொதிக்கவைத்தால் நீர் மேல் வெண்மையான நுரைவரும், அதையெல்லாம் வழித்துக் கடாயில் போட்டுக் காய்ச்சினால் நெய்யாகும். அதை வைத்துக்கொண்டு தடவினால் சொரி சிரங்கு, பெரும் புண், படைப் புண், மேகப் புண் என்னும் இவை நீங்கும்.

கடாயில் காய்ச்சும்போது தாளகம், துருசு, கந்தகம் வகைக்கு கால் பலம் எடுத்துப் பொடித்துச் சேர்த்தும் காய்ச்சலாம்.

கந்தகம் 16-குன்றியை நன்றாய்ப் பொடித்துத் தக்க அளவு தேங்காய் நெய்யில் குழைத்துப் பூசலாம்.

கந்தகத்திற்குப் பதிலாக மிருதார்சிங்கியை மேற்படியே உபயோகிக்கவும்.

வங்கக்களிம்பு, அமிர்த வெண்ணெய் இவைகளும் நன்று.

அகமருந்துகள்:—சொரி சிரங்குள்ளவர்களுக்கு முதலில் புரநெய் (வெள்ளை எண்ணெய்) ஒரு அவுன்ஸ் கொடுக்கவேண்டும். துட்ட சிரங்காக இருப்பின் இதனை அல்லது மேகநாத எண்ணெயை மூன்று நாள் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்கவேண்டும்.

உஷ்ண தேகிகளாயிருப்பின் சிலாசத்துப் பற்பம், குங்குலிய பற்பம் வகைக்கு இரு குன்றிகளாகக் கலந்து, பறங்கிப் பொடி ஐந்து குன்றி எடை சேர்த்துப் பாலில் கலந்து காலை, மாலை தினத்திற்கு இருவேளை கொடுக்கவும்.

தனிப் பறங்கிப் பொடியையும் வழங்கலாம்.

மேக தேகிகளுக்குக் கந்தகரசாயனம் பத்து குன்றி விதம் பாலில் இருவேளை கொடுக்கலாம். அல்லது பறங்கிப் பதங்கத்தை மூன்று குன்றி விதம் பாலில் தினம் இருவேளை கொடுக்கவும். சேராங்கொட்டை லேகியமும், இரச கந்தி மெழுகும் பயன்படும்.

பத்தியம்:—எண்ணெய், கடுகு, சிரங்கை அதிகரிக்கச் செய்யும் பொருள்கள் முதலியவைகளை நீக்கி, பால், மோர், கீரைகளை அதிகமாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.

# எல். ஐ. எம். பயிற்சியும் சம்பளமும்

இந்திய மருத்துவக் கலாசாலையில் மாணவர்களுக்கு முதல் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு சோதனை (பரீக்ஷை) வீதம் இரு தேர்ச்சிகளும், நான்கு ஆண்டுகள் பயிற்சியுந்தானிருந்தன. பிறகு, சில காலத்திற்கெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு தேர்வாக நான்கு சோதனைகளும், அதற்குப் பிறகு நான்கு ஆண்டுகள் பயிற்சி ஐந்து ஆண்டுகளுமாக உயர்த்தப்பட்டன. ஐந்தாம் ஆண்டும் ஒரு தேர்ச்சி வைக்க இப்பொழுது சர்க்கார் முன்வந்துள்ளார்கள். இங்ஙனம் எல். ஐ. எம். டாக்டர்களுக்கு அளிக்கப்படும் கல்வியும் பயிற்சியும் நாளுக்கு நாள் உயர்கிறது. சந்தோஷம். ஆனால் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சம்பளம்மட்டும் உயராமல், அப்படியே பழைய அளவில் நிற்கிறது. இது மிகவும் விசனிக்கத்தக்கது.


எஸ். எஸ். எல். ஸி. படித்த ஒரு ஆண் அல்லது பெண் சுகாதார (சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ்) படிப்பையோ அல்லது ஆரோக்கிய நிர்வாகி (ஹெல்த் விஸிடர்ஸ்) படிப்பையோ ஒன்று, இரண்டு ஆண்டுகள் கற்றால் மாதம் ஒன்றுக்கு, 105 முறையே 120 ரூபாய் வரை சம்பளம் ஜில்லா போர்டுகளிலும், முனிசிபாலிடிகளிலும் பெறலாம். ஆனால் இந்திய மருத்துவத்தை ஐந்து ஆண்டுகள் கற்றும் மாதம் ஒன்றுக்கு 70 ரூபாய்க்கு மேல் சம்பளம் மேற்படி நிலையங்களில் பெறமுடியாது. இது மிகவும் பரிதாபம்!

எல். ஐ. எம். களின் நிலைமை இவ்வளவு தாழ்வாக இருப்பின், படித்தவர்கள் இந்திய மருத்துவத்தை எங்ஙனம் கற்க முன்வருவார்கள்? ஆகையால் இத்தாழ்வான நிலைமையைச் சர்க்கார் உடனே நீக்கவேண்டும். எல். ஐ. எம். களுக்கு விதிக்கப்பட்டுள்ள சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும். மாதச் சம்பளம் ரூபாய் 150 வரை உயரும்படித் தீர்மானித்து, 60—5—150 ரூபாய் விகிதம் சம்பளம் கொடுக்க அநுமதிக்க வேண்டும்.

எல். ஐ. எம்.

342

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி
ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,
தென் இந்தியா.




## NEO-GRIPE

நியோ-கிரைப் — குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அஜீரணம், வயிறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்க வேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.



NEO-PHLOGESTINE (நியோ-பிளாஜிஸ்டின்) இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

BABA'S-CURE (பாபாஸ்-க்யூர்) இருமல், இளைப்பு, சுவாச காசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது தேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)

342
12.6.44
23 AUG 1944

Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவம்.

திங்கள் வெளியீடு

பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | ஏப்ரல் 1944 | இதழ் 4.

ஆசிரியர் :

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர் :

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

## 1944-ம் ஆண்டு எப்ரல் திங்கள் எல். ஐ. எம். சோதனையில் தேறிய மாணவர்களின் எண்கள்.

### 1-ம் ஆண்டு எல்.ஐ.எம்.

முதல் வகுப்பு:—47, 50.

இரண்டாம் வகுப்பு:—12, 21.

மூன்றாம் வகுப்பு:—5, 6, 8, 11, 13, 14, 26, 27, 28, 30, 32, 38, 39, 40, 49, 54, 56, 57, 58.

### 2-ம் ஆண்டு எல்.ஐ.எம்.

இரண்டாம் வகுப்பு:—61 மட்டும்.

மூன்றாம் வகுப்பு:—60, 62, 68, 69, 70, 73, 75, 76.

### 3-ம் ஆண்டு எல்.ஐ.எம்.

முதல் வகுப்பு:—109, 119.

இரண்டாம் வகுப்பு:—88, 111, 120.

மூன்றாம் வகுப்பு:—87, 90 முதல் 95 வரை, 101, 103, 105, 112, 118.

### 4-ம் ஆண்டு எல்.ஐ.எம்.

இரண்டாம் வகுப்பு:—202, 205.

மூன்றாம் வகுப்பு:—125, 137, 155, 15 , 161, 165, 167, 171, 173, 174, 175, 177, 190, 199, 213.

### 1-ம், 2-ம் ஆண்டு

எ. எல். ஐ. எம்.:—நபர் இல்லை.

---

### தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை அளித்த பெரியார்களின் பெயர்கள்

டாக்டர், G. கண்ணுசாமி பிள்ளை, திருவாரூர் ரூ. 5—0—0

G. சின்னு, மதுரை ,, 5—0—0


# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 | எப்ரல் 1944 | இதழ் 4


## அட்டை


Dr. R. தியாகராஜன், L.I.M.


இஃது ஆழமில்லாததும், ஆழமுடையதுமான தெளிந்த நல்ல நீரில் அல்லி, நெய்தல், கொட்டி போன்ற மணமுள்ள செடிகள் இருக்குமிடத்துக் கிடைக்கும். மற்றும், இது மணலின் கீழ் மறைவாக ஒதுங்கிக் கிடப்பதும் உண்டு. இதனைப் பிடித்து முக்கால் பாகம் நீருள்ள வாயகன்ற கண்ணாடிப் புட்டியில் விட்டு, உணவுக்காகச் செவ்வல்லி, கொட்டி, பசுமஞ்சள் இவற்றின் கிழங்கிலொன்றை அரைத்துச் சேர்த்துப் பற்றி உறங்க இலைகள் இட்டு, புட்டியின் வாயை ஒரு மெல்லிய துணியால் மூடி அடிக்கடி நீரை மாற்றிக்கொண்டு வந்தால் பல திங்கள்கள் உயிருடன் தேற்றலாம். சிறிய உருவே மருத்துவத்திற்கு நன்றாய்ப் பயன்படும். அட்டையை மூவகையாகப் பிரித்துக் கூறுவர். அவையாவன:—1. நல்ல அட்டை, 2. தீய அட்டை, 3. சாதாரண அட்டை என்பன. இவற்றில் நல்ல அட்டை நால் வகைப்படுமென்பர். அவையாவன:—

முதல் வகுப்பு:—வெண்மையும் சிறிது பொன் நிறமும் பொருந்தி யிருக்கும்.

இரண்டாம் வகுப்பு:—செங்கழுநீர் நிறமாயிருக்கும்.

மூன்றாம் வகுப்பு:—பவழ நிறத்தையும் அரிசியின் உருவத்தையும் பெற்றிருக்கும்.

நான்காம் வகுப்பு:—பச்சை அல்லது எலுமிச்சம்பழ நிறமாகும்.

தீய அட்டை கருநிறம், கருஞ்செம்மை நிறம் அல்லது வானவில் போன்ற பல நிறங்களைப் பொருந்தியிருக்கும்.

சாதாரண அட்டை பொற்கு நிறத்தில் கருநிறம் பொருந்தியிருக்கும். நிற்க, தனிவெள்ளை, மிகு நீலம், பொன்மை, கருப்பு நிறம் பொருந்திய அட்டைகள் தேசகுணமாமென்பர். சாதாரண அட்டை 2 முதல் 4 அங்குல நீளம், சிறிது கூர்மையான முனைகளுடன், புறத்தோலில் 6 நீளக் கோடுகளுடன் குறுக்குச் சுருக்கங்களையும் பெற்றிருக்கும். அட்டைக்குப் பல் மூன்று, தோலடுக்கு ஐந்து, முகம் பச்சை அல்லது சிவப்பு, பக்கமிரண்டிலும் பருத்த நரம்பு சேர்ந்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆங்கில ஜீவ நூல்கள் அட்டையில் ஆண் பெண் தனியாய் இல்லை என்று கூறினும் நம் நூற்கள் ஆண் பெண் உண்டென்றே கூறும். இதற்கு ஏது,

“ஆண்மிகில் ஆணும் பெண்மிகில் பெண்ணும்” என்ற வடியால் உணர்க. இவற்றில் ஆண் பெண்ணறிய, தாமரையையும், கொட்டியையும் நீரிலிட்டு அட்டையை விட ஆண் தாமரையைச் சேருவதினாலும், பேடுகொட்டியைப் பற்றுவதினாலும் கண்டுகொள்ள வேண்டும். இதனை,

“அட்டையில் பெண்ணும் ஆணும் அறிந்திட வேணுமாகில்
கொட்டியும் பதுமத்தாளுங் கூடவே நீரில் போட்டால்
அட்டையை விட்டவாறே ஆண்பதுமத்திற் சேருங்
கொட்டியிற் பேடுசேருங் குறிதனை யறிந்து கொள்ளே.”

என்ற செய்யுளால் உணர்க.

நிற்க, நண்டு, தவளை, நீர்ப்பாம்புகளையுடைய நீர், ஓட்டமில்லா நீர்நிலை, சருகூறிய நீர் இவைகளிற் பிறந்த அட்டை மருத்துவத்திற்காகாவாம். இதனை,

“ஆகாவட்டை யதுகேளாய் அலவன் தவளை நீர்ப்பாம்பு
மேகாசலத்தில் பிறந்தனவும் வேண்டா சருகிற் பிறந்தனவும்
போகாச்சுனையில் பிறந்தனவும் பொல்லா வட்டையிவையென்றே
பாகார் மொழிகொள் பைந்தொடியே பாராயட்டை
[வகுப்பினையே.”

என்று புகன்றிருப்பதினால் உணர்க.

## செய்கையும், ஆட்சியும்.

இதைச் சிறப்பாக வீக்கம் நீக்குஞ் செய்கைக்காக கார்இரத்தக் குழலைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தல்போல இரத்தத்தை வெளிப்படுத்த உபயோகித்தல் வழக்கமாயினும் முதியவர்க்கும், பெண்களுக்கும், சிறுருக்கும், மென்மை உடலைப் பெற்றோருக்கும், ஆயுத சிகிச்சைக்குப் பயந்தவர்க்கும், பித்த உடம்பினர்க்கும் சிறப்பாக உபயோகிக்கலாம். அட்டை நீரில் பிறந்து வசிப்பதினால் இனிப்பையும் குளிர்ச்சியையும் உடைத்தாதலின், பித்த நோய்களும் நீங்கும்



என்று கண்டுகொள்க. ஒரு அட்டை சுமார் 120 துளிவரை இரத்தத்தை இழுக்கும் வன்மை உடைத்து. அட்டை உரிஞ்சுவதினால் 12 அங்குலம் வரை உள்ள இரத்தம் வெளிப்படும் என்பதை,

“அட்டைவிடு உதிரம் ஆறிரண்டங்குலம் போம்”

என்ற தொடரால் அறிக.

அன்னம் நீரைப் பிரித்துப் பாலைப் பருகுவதுபோல் அட்டையானது விடநீரைப் பருகி இரத்தத்தைச் சுத்தி செய்யும் என்பதை,

“முன்னே கேளாயட்டையதன் குணத்தைச் சொல்வன்
மொய்குழலே
அந்நாளன்னம் பால்பருகும் அதுபோல் வாங்கும் விஷநீரை
நன்னாள் பார்த்து நோயறிந்து நயனந் தன்னில் விடுவாயால்.”

என்ற வடிகளால் உணர்க.

ஓரே சமயத்தில் 4 அல்லது 6 அட்டைகளுக்குமேல் விடக்கூடாது. நிற்க, இதனைப் பல்வகைப் பிணிகளில் உபயோகிக்கும் விதத்தினைக் கீழ்க் கூறுவாம்.

அடிபட்ட வீக்கங்கள், கட்டிகள், கிரந்தி வீக்கங்கள், சுளுக்கு, தோல், என்பு போன்ற உறுப்புகளைப்பற்றிய வீக்கங்களிலும், அவ்வவ் விடங்களில் அட்டையை விட்டு இரத்தத்தை வெளிப்படுத்தத் தீரும்.

மருத்துவத்திற் கடங்கா வாந்தியில் நெஞ்சக் குழியில் விட நீங்கும்.

தாங்காத் தலைநோயில் பொட்டில் விடத்தணியும். தணியாவிடின் பிடரியில் விடவும்.

சுரத்திலுண்டாம் மார்பு நோய், வயிற்று நோய் என்னுமிவற்றில் நோய் கண்ட இடத்தில் விடவேண்டும்.

இரத்த மூலத்தில் இரத்தம் தடைப்படுவதினால் உண்டாம் தலைநோய்க்கு அட்டையைக் குதத்தைச் சுற்றி விட நீங்கும். இது குதத்திற் புகாவண்ணம் காத்துக் கொள்ளவும்.

சூதகத் தடையினால் உண்டாம் தலைநோய் நீங்கத் தொடைகளின் உட்பக்கம் கடிக்கவிடவும்.

இரத்த சீதபேதியில் உண்டாம் வயிற்றுக் கடுப்புத்தீரக் குதத்தைச் சுற்றி விடவும்.

கல்லீரல் வீக்கத்திற்கு அவ்விடத்தே விடப் பலன் தரும்.

சிறுருக்குண்டாம் கக்குவான் நோய்தீர முதுகின் நடுவின்மேல் விடவும்.

நாட்பட்ட, பல்வகைப்பட்ட கீல்களைப்பற்றிய வீக்கங்களுக்கு அட்டைவிட்டு நற்குணம் கண்டிருக்கின்றோம்.

மற்றும் கண்ணில் கனம் தோன்றி, வலித்து, நீரொழுகிக்கொண்டு புருவத்தில் வலியுண்டானால் அட்டை விடுதல் நன்றாகும். அதனை,

"கண்ணது கனத்துநொந்து கண்ணில் நீரொழுகு மாயின்
விண்ணுடன் புருவத்தோடு மேலுற வலித்த போது
நண்ணிய அட்டை விட்டு நிமைபெற நீளந்தன்னில்
திண்ணிய கிரமத்தாலே செய்வதோர் கருமம் நன்றாம்."

என்று புகன்றிருப்பதால் உணர்க.

மேலே குறிப்பிடப்பட்ட குறி குணங்கள் கண்ணோய்களுக்குப் பொதுவாயினும் சிறப்பாக நேத்திர சூலை, வாத காசம், கருவிழியில் உண்டாம் படர்விரணம், காசநோயில் சரிவர சஸ்திர சிகிச்சை செய்யப்படாததினால் உண்டாம் அழற்சி இவைகளுக்கு அட்டை விட்டுப் பலன் கண்டனம். மற்றும் நிமையில் அட்டையை விடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. கடைக் கண்ணிலிருந்து ½ அங்குல தூரத்தில் புருவ முனைக்குக் கீழ் விடுவதே நலமென்று கண்டு கொள்க.

## அட்டை விடக்கூடா இடங்களும் திதிகளும்.

அட்டைகளைக் கார்இரத்தக் குழல்கள் தோன்று மிடங்களிலும், நாடி பரிசிக்கப்படும் வீக்கங்களிலும், கண்ணிமைகளிலும், ஆண் குறி, அண்டம், குய்யம், ஸ்தனம் இவைகளின்மீதும் விடுதலாகா, விடின் வீக்கத்தை உண்டு பண்ணும். சிறுவர்களுக்கு இரத்தம் விரைவில் வெளிப்படுமாகையால் கண்காணிப்பாக என்பிருக்குமிடங்களில் விடலே நன்று. அட்டைவிட நடுப்பத்து நாழிகை சிறந்ததாயினும் குழந்தைகளுக்குக் காலையில் விடலே நன்று. ஏனெனில் மாலையில் விட்டால் ஒருகால் இரவில் கடிவாயினின்றும் இரத்தம் பெருகின் கவனிக்க இயலாது. அதனால் ஆபத்து நேரும் என்க. மற்றும், பிரதமையில் பெருவிரலிலும், துதியையில் உள்ளங்காலிலும், திரிதிகையில் முழங்காலிலும், சதுர்த்தியில் தொடையிலும், பஞ்சமியில் குய்யத்திலும், சஷ்டியில் நாபியிலும், சப்தமியில் ஸ்தனத்திலும், அஷ்டமியில் கரத்திலும், நவமியில் கழுத்திலும், தசமியில் அதரத்திலும், ஏகாதசியில் நாக்கிலும், துவாதசியில் நெற்றியிலும், திரயோதசியில் புருவத்திலும், சதுர்த்தசியில் பிடரியிலும், பூரணத்தன்று உச்சியிலும் * அமிர்தம் நிற்கின்றபடியினால் அத்திதிகளில் அவ்விடங்களில் அட்டைவிடக்கூடாது. விடின் மரணம் நேரிடுமென்று கூறப்பட்டுள்ளது.

## சுத்தியும் ஆராய்ச்சியும்.

அட்டையைக் கடிக்க விடுமுன் சுத்திக்க ஒரு வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் மஞ்சள் கரைத்த நீரிட்டு அதில் அட்டையைவிட அதன் உடம்பினின்றும் கோழையொத்த கழி பொருள் வெளியாகும். பிறகு உபயோகிக்கவும், இக் கழிபொருள் அதிகமாயிருப்பினும், நீரில் சுறுசுறுப்பாய் ஓடாவிடினும் அட்டை பற்றாதென்றுணர்க.

(தொடரும்)

# வாந்தி

Dr. S. சுப்பிரமணியன்.

வாந்தி என்பது உண்ணும் உணவு, குடிக்கும் நீர், ஓடும் இரத்தம், கோழை, பித்த நீர் ஆகிய இவைகள் வாயின் வழியாக மேல் நோக்கி வருவதாகும். இதனை மேல்நாட்டு மருத்துவர்கள் ஒரு நோயின் குறியே யல்லாது தனி நோயன்று என்று கூறுகின்றனர். ஆனால் நம் மருத்துவ முறைப்படி இதனைத் தனி நோயாகக் கொண்டு மருத்துவம் கூறி இருக்கின்றனர். மேலும் சிகிச்சை முறையிலும் வாந்தி செய்வித்தல் உண்டு என்பதை ஐந்துவித சிகிச்சைகளான வாந்தி (வமனம்), பேதி (விரேசனம்), நசியம், நாசிகாபரணம், (இவ்விரண்டும் நாசிசம்பந்தம்) பீச்சல் (வஸ்தி), இரத்தம் வாங்குதல் (இரத்தமோக்ஷணம்) என்பதால் அறியலாம்.

வாந்தி தோன்றக் கூடிய காரணங்கள்:—

"அச்சந் தன்னைற் கண்ணீற்று லடர்ந்த கிருமி மிகுந்திடலால்
கொச்சைத் திரிதோஷங்களினாற் கோது மயிருள் விழுங்குகையால்
மெச்சுஞ் சனியின் ரோஷைத்தான் மிகுத்த வாந்தி தோன்றமென
விச்சைப் பலவற் கலைவாணர் விரித்தேயிதனை விளம்பினரே.

வாதத்தாலுஞ் சிலேத் துமங்கள் மந்தத்தாலும் வாந்திக்கும்
பேதித்துடலின் மெலிவாலும் பெருகுஞ் சுரங்கட்டம் மாலும்
நீதிக் குறைநீர்ப் பாட்டாலு நிகரில் தெய்வ விரோதத்தால்
சோதித் திடுகில் வாந்தியது தோன்று மெனவே தொகுத்தாரே."

வாந்தியின் பிரிவு:—

"சொன்னோமே தொகுப்புடனே வாந்திரோகம்
தொகையறைவே னதனுடைய தொகுட்டைக்கேளு
மன்னேதான் வாதத்தின் வாந்தி யாகும்
மடிப்பான பித்தத்தின் வாந்தி யாகும்
முன்னேகேள் ஐயத்தின் வாந்தி யாகும்
முனையான முக்குற்ற வாந்தி யாகும்
அன்னைகேள் திருஷ்டான்ன கிருமி வாந்தி
அப்பனே வமனமென்னும் வாந்தியாமே."

குறிப்பு:—மேற்கூறியவைகளுடன் சில நூல்களில் இரத்த வாந்தி, மலமேறு வாந்தி, சூல் வாந்தி, மருந்தீட்டு வாந்தியாகிய இவைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

வாந்தியில் ஏற்படும் முக்குற்ற வேறுபாடு:—

தேரன் "வளர்பித்த சேதமைது வாந்தி யா" என்று கூறியிருப்பதிலிருந்து மிகுதியாக முக்குற்றத்தில் கேடு அடைந்திருப்

பது பித்தமாகும். பித்தத்தின் உட்பிரிவாகிய ஐந்தனுள் அனல பித்தம் கெட்டிருக்கின்றது என்பதை அதன் தொழிலால் ஒருவாறு உணரலாம். பித்தம் கெட்டிருக்குங்கால், உண்ணப்படும் பொருள்கள் நன்றாகச் செரிக்கப்படாததினால் மந்தம், புளியேப்பம் முதலியவைகள் ஏற்படுகின்றன. அந்நிலையில் சுபாவ மேல் நோக்கு நிலையுள்ள உதானவாயு விருத்தி அடைந்து நன்றாகச் சமைக்கப்படாத பொருள்களை மேல் நோக்காக வெளிப்படுத்துகின்றது.

வாந்தியில் ஏற்படும் முற்குறி குணங்கள் :—

வாயில் வேறுபட்ட சுவைதோன்றல், அதிகமாக உமிழ்நீர் சுரப்பு, வயிற்றில் ஏதோ சங்கடம் செய்தல், சில சமயங்களில் தலை வலி, தலை கனம், தலை சுழலல், பசியின்மை, மலபந்தம் ஆகிய இவைகளாம்.

வாத வாந்தியின் குறி குணங்கள் :—

"ஆமே தான் நடுமுதுகில் நோயுண்டாகும்
ஆகாரஞ் சமியாமல் மேல் நோக்காகும்
காமேதான் கண்டமது சத்தங் காணும்
கடிதான வாய்வரளல் மார்பு நோயாம்
போமேதான் தலைவலியுங் குரலுங் கம்மல்
பொல்லாத வேதனைகள் பொருமிக் கொள்ளும்
தாமேதான் சொன்னபடி சிகிச்சா சாரம்
நாட்டினார் யூகிமுனி நாட்டு ளோர்க்கே."

சிகிச்சை :—பித்தத்தைச் சமனம் செய்வதற்கு மருந்துகள் கொடுத்தலுடன், அகட்டு வாய்வகற்றி, பசித்தீத்தூண்டிச் செய்கையுள்ள மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும். பட்டினி வைப்பதும், பேதிக்குக் கொடுத்தலும் நன்று.

பித்த வாந்தி :—

"நாட்டியே புகையுட னிருமலாகும்
நலமாகப் பச்சிலைபோல் மஞ்ச ளாகும்
நீட்டியே ரத்தமொடு புளிப்பு மாகும்
நிலையான காரமொடு சுடுகை யாகும்
கூட்டியே தாகமொடு வாந்தி யாகும்
குடிலமா மெரிச்சலொடு காங்கை யாகும்
வாட்டியே தலைச்சுழல் மூர்ச்சை யாகும்
வாகான பித்தத்தின் வாந்தி யாமே."

சிகிச்சை :—இதற்குப் புளிப்புச் சுவையுள்ள மணப்பாகுகள் பழ இரசங்கள், இஞ்சிரசாயனம், ஏலாதிச் சூரணம், பழ லேகியம், முதலியவைகளில் ஒன்றைக் கொடுக்க வேண்டும். சிறப்பாகச் சாதிசம்பீரக் குழம்பைக் கொடுத்தால் உடன் நன்மை பயக்கும். ஆகாரமாகப் பால், பழவகைகள், இளநீர், நெற்பொரிக்கஞ்சி முதலியவைகளைக் கொடுத்து வரலாம்.



கபவாந்தி :—

"வாந்தியாஞ் சீதளமுந் துடிப்பு காணும்
வாகாகா இனிப்புடனே உப்பு மாகும்
காந்தளமா மிரத்தமது மேலே பொங்கும்
கடிதான அசைப்புடனே சோரல் தோன்றும்
தேந்துமே மார்பதுதான் துடிப்பு காணும்
திகைக்குமே வழுவழுப்பு காந்த லாகும்
பாந்தனெனு மிருமலது அதிக மாகிப்
பாரிக்குந் தேகமது பளுவு மாமே."

சிகிச்சை :—கபவாந்தியில் வாந்தியை உண்டு பண்ணுவதற்கான மருந்துகளையே கொடுத்தல் வேண்டும். கடுகைச் சிட்டிகை எடுத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம். பிறகு வாந்திக்கான பொது சிகிச்சையைச் செய்யவேண்டும்.

முக்குற்ற வாந்தி :—வாத, பித்த, கப வாந்திகளில் கூறியுள்ள குறி குணங்கள் எல்லாவற்றையும் பெற்றிருக்கும் சிகிச்சையும் மேற் கூறியவாறேயாம்.

கண்ணேறு வாந்தி :—

"நலங்கவே வஞ்சனைகள் கெடுநினைப்பு
நலமாகப் பதார்த்தவகை புசித்தபேரை
இலங்கவே பார்த்து நமக்கில்லையென்று
ஏமாந்தே யிருந்ததொரு பாவிகட்கும்
கலங்கவே யறு சுவைகளுண்ட பேரைக்
காதிறைகேட்டு மனதேங்கி னோர்க்கும்
துலங்கவே வாந்தியது மிகவுண்டாகித்
துடிக்குமே திருஷ்டியிலே சுழலுவாரே."

சிகிச்சை :—மந்திரம் முதலியவைகளால் பரிகாரம் செய்து கொள்ளுவதுடன் வாந்திக்கான பொது மருத்துவத்தைச் செய்யவேண்டும்.

கிருமி வாந்தி :—

"சுழன்றுமே வாதாதி தோஷந் தன்னால்
தோன்றுமே கிருமியுடன் வயிற்றில் நோயாம்
கழன்றுமே தேகமது நடுக்க லாகும்
காட்டுமே துடிப்புடனே மார்பில் நோயாம்
அழன்றுமே கிருமியது வாந்தியிற் காணும்
அதட்டியே விக்கலுடன் சோபந் தோன்றும்
விழன்றுமே யாவியுடன் வாந்தி யாகும்
வினையாக முடியுமே வியாதி தானே."

சிகிச்சை :—வாந்தியை நிறுத்துவதற்கான பொது மருத்துவம் செய்வதுடன் கிருமிகொல்லிச் செய்கையுள்ள முருக்கம்விதை மாத்திரை, வாய்விடங்கச் சூரணம் முதலியவைகளைக் கொடுத்து மறுநாள் பேதிக்குக் கொடுத்தல் வேண்டும்.

இரத்த வாந்தி:—இரத்தம் இரத்தமாகக் கக்குவதையே இரத்த வாந்தி எனக் கூறுகின்றனர்.

தீர்வு:—"இன்பூறலைக் காணுது இரத்தங்கக்கிச் செத்தான்" என்று கூறி இருப்பதால் இன்பூறல் குடிநீர், மேகியம் கொடுப்பதுடன் பவளம், சிலாசத்து, சங்கு முதலியவைகளின் பற்பங்களையும் தக்க அனுபானத்தில் கொடுக்கலாம்.

சூல் வாந்தி:—இதனை மசக்கை வாந்தி எனவும் கூறுவர். இது சூல்கொண்ட மாதர்களுக்குப் பெரும்பாலும் காணும். இது கொஞ்சமாக இருப்பின் மருத்துவம் வேண்டியதில்லை. ஆனால் இது உடலை வருத்தக்கூடிய அளவு இருப்பின் கீழ்க்கண்ட குடிநீரைப் போட்டுக்கொடுக்க நன்மையைப் பயக்கும். ஜாதி ஜம்பீரக் குழம்பையும் சிறிய அளவில் கொடுக்கலாம்.

### குடிநீர்

பழம்புளி வராகன் 5, நற்சீரகம் வராகன் 2½ இவ்விரண்டையும் நன்றாகப் பிசைந்து அடைபோல் தட்டி, தேன்விட்டு வறுத்து, தேங்காய்க் குடுமிக்கருக்கு ஐந்து சட்டியை சேர்த்து, தக்க அளவு நீர் விட்டு, முறைப்படி குடிநீர் செய்து இருவேளை கொடுக்கால் நீங்கும்.

மல வாந்தி:—இதில் வாந்தியானது மிகவும் மல நாற்றத்தை உடையதாயிருக்கும். இதுகண்ட நோயாளி பிழைத்தல் கடினம். இது குடல் முறுக்கிக் கொள்வதால் ஏற்படுகின்றது எனக் கூறுகின்றனர்.

மேலும் கொடிய சுரங்களிலும் ஊழிநோயிலும் வாந்தி காண்கின்றது. கொடிய பித்த சுரங்களில் இது சிறப்பாக உண்டாகும்.

ஊழிநோயில் வாந்தி ஏற்படும் என்பதை, அதற்கு வாந்திபேதி என்னும் வேறு பெயர் உளதால் அறியலாம். மேலும் "செப்பவே கொம்பனைன்ற பேதிகண்டால் தெளியாது வாந்தியுடன் பிராந்தி தோன்றும்" என்ற மேற்கோளாலும் அறிக. இதற்கு நோய்க்கு நேரான மருத்துவம் போதும்.

வாந்தியில் நாடி காணப்படுதல்:—

மோதிர விரல் வலத்தே முடுகியே நாடி யோடில்
காதியுங் குலைநோ யுண்டாம் கைத்திடும் வாய்நீ ரூறும்
வாதியா னருளி னாலே மயக்கமும் வாந்தி யுண்டாம்
ஆதியே அடி வயிற்றிற் குலையு மமர்ந்து நிற்கும்.



மேலும்:—

"பித்தத்திற் பித்த மாகில் பிதற்றிடுங் கிறுகி றுக்கும்
சத்தியு மதிக மாகும்........................" எனவும்
கூறப்பட்டிருக்கிறது.

## வேகங்கள் 14-ல் ஒன்றாகிய வாந்தியைத் தடைசெய்வதால் ஏற்படும் நோய்கள்

"சத்தியை யடக்கினக்கால் தடித்திட்ட கடிகுஷ்டங்கள்
மெத்தவுந் தினவுபாண்டு மேவுகண் ரோக முண்டாய்
பித்தமில் விஷபா கங்கள் பெருகிடும் சுவாசகாசம்
பற்றிய காசமாகும் பகர்ந்தவிக் குணங்களுண்டே."

ஆனால் வாந்தி அதிக அளவில் இருக்குமானால் கட்டாயம் தடை செய்யவேண்டும். ஏனெனில் உடலிலுள்ள தாதுக்களின் வலிவு குறைவதுடன் இரச, இரத்த தாதுக்கள் தம்மளவில் குறைந்து உயிருக்குக் கெடுதலை விளைவிக்கும்.

மேலும் காலவொழுக்கத்தில் கூறியவாறு வருடத்திற்கு இரண்டு முறை வாந்தி செய்வித்தல் வேண்டும்.

பத்தியம்:—பித்தத்தைச் சமனம் செய்யக்கூடியதும், வாயுவைக் கண்டிக்கக் கூடியதுமாக இருத்தல் வேண்டும். மேலும் இலகுவில் சீரணிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அரோசகத்தைப் போக்கக்கூடியதான இலந்தை வடகம், இஞ்சித்தேனூறல், ஏலம் முதலியவைகளை வாயில் அடக்கிக்கொள்ளல், வாசனையுள்ள பொருள்களை நுகர்தல் முதலியவைகள் நன்றாம்.

வாந்தியை நிறுத்துவதற்குக் கீழ்க்கண்ட சரக்குகளில் ஒன்றோ பலவோ சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்கலாம். நெற்பொரி, விலாமிச்சம் வேர், ஏலரிசி, சீரகம் பொரித்தது, இஞ்சி, எலுமிச்சம்பழம், வேர், கொத்துமல்லி, ஏலக்காய்த் தோல், வெம்பீர்க்கு, கருவேப்பிலை, ஈர்க்கு, அதிமதுரம், வில்வ வேர், வசம்புச் சாம்பல், கோட்டம், நெல்லிக்காய், சந்தனம், திராட்சை, மயிலிறகு, பழைய பனைஓலைச் சாம்பல் ஆகிய இவைபோன்றவை.

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

## NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் தேகப் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசீரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக் கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

## NEO-PHLOGESTINE

நியோ-பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

## BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு. சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)


456


Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

| மலர் 4 | ஆகஸ்ட் 1944 | இதழ் 8. |
|---|---|---|

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.


6-DEC 1944


உரிமையாளர்:

காரியக்கமிட்டியார்: சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press, No. 7, Nallanna Mudaly Street, Royapettah and Published by C. M. Raja Jegatheesan, at Govt. School of Indian Medicine, "Hyde Park" Poonamallee High Road, Kilpauk, Madras.

## தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

### NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அஜீரணம், வயிறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக் கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

### NEO-PHLOGESTINE

நியோ-பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

### BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு, சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)


# *கவுசிகர் குழம்பு

## பொதுவணக்கம்

### ஆசிரியப்பா

சருவேச் சுரனார் சகலமும் படைத்தோர்
அருமறைப் பொருளால் யாவரும் பிழைக்கக்
குரு முறையான குழம்பின் குணத்தால்
திருவரு ளொன்று செய்திடும் பேர்கட்
கிருவினை நாலா யிரத்து நானூறொ
டுறுகாற் பத்தெட் டுயர்பிணி நீரச்
சிறுவர்க் குதவி செய்தன ரன்றே.

### மருந்து செய்முறையும் துணைமருந்தும்.

கற்பித கடுக்காய் கடுகிந் துப்பு
நற்பெருங் காயம் நல்வெங் காரம்
மெய்ப்புள ருத மேவும னோசிலை
திப்பிலி தாரந் †சீர்க்கருஞ் சீரகம்
ஒப்புடன் கடக ரோகணி நாபி
அப்படி மருந்துக ளவைபன் னிரண்டும்
இப்படி வாள மிதற்குச் சரியெடை
உற்பவ கஞ்சா முள்முளை போக்கி
நட்பினிற் சரக்கை நல்லிள வறுப்பாய்
அற்புடன் சூரண மாய்ப்பொடி செய்து
கொஞ்சிய தென்னங் குடுக்கைக் கரியும்
அஞ்சு வராக னளவாய்ச் சேர்த்து
‡மிஞ்சிய நற்பனை வெல்ல மங்கிறை
||வஞ்சிநற் பொற்றலைச் சாற்றி லொருநாள்
துஞ்சுதேங் காய்ப்பால் சொரிந்ததி லரைத்து
மிஞ்சிய பதத்தில் மேதிச் சிமிழில்
வைத்துல கத்தில் வரும்பல நோய்கட்
குற்றது பான முறைக்கக் கேண்மின்

பாடபேதம்:
*கவுசிகர்மை †சீரகத் துடனே
‡மிஞ்சிய கருப்பு வெல்லமங்கிறை
||பஞ்சுறு வேலிப் பருத்தி நீரோர்நாள்

[1]வெள்ளை யக்கரம் விருமெழு தோடம்
கள்ள வக்கரங் கண்டதோ ரேழும்
கறுத்த வக்கரங் கடினமா மேழும்
சிவந்தஅக் கரங்கள் இல்லை யேழும்
மூவெழு தோட முரிந்தொட் டோட
நாவிற் பனைவெடை நன்றாய்த் தேய்த்துக்
கூவிய வெந்நீர் கொடுத்திடத் தீரும்
[2]சந்தி தோடஞ் சர்வ சுரங்களும்
வெந்நீ ரிற்கொள விட்டகன் றோடும்
[3]கடுக்காய் நீரிற் காசெடை கொள்ள
இடுக்கைச் சுரங்க ளிருபதுந் தீரும்
[4]முடுக்குங் குளிர்சுர மூதேவி தீரும்
விடுக்குஞ் சுக்கு வெந்நீ ரிற்கொள்
[5]சிதேவி சிரக வெந்நீ ரிற்கொள
மூதேவி வெஞ்சுர முரிந்திடு மன்றே
[6]எட்டெட் டுச்சுர மேல மிளகுடன்
அட்டியில் லாமல கன்றுபோ மன்றே
[7]கொண்ணைக் கொழுந்து கொள்கடுக் காய்ப்பொடி
எண்ணெயிற் கொள்ள இரைப்புப் புசம்போம்
[8]சந்தி யிருமல் சத்தியுள மாந்தை
சொன்னோங் கேளீர் சுகவுசில் பட்டையில்
[9]இன்னதை யிடித்து இரமுடன் குடிக்க
கட்கரை யிருமல் கண்டிப்பு தீரும்
[10]காக்கைவலி யிருமல் கண்டித்த தீர
ஏற்க விருகா லெண்ணெய் முலைப்பால்
பரிவுடன் கொள்ளப் பறந்தோட றோடும்
[11]குட்ட நோயும் குவளைப் புருதியும்
இட்டமாம் பறங்கிப் பட்டையி லிடறும்
[12]ஆடா தோடை யரத்தையின் பாலில்
ஆடா மெண்ணெய் சுகம்பெறக் குடிக்கின்
ஈளை யிருமல் எங்கெனப் புசம்போம்
[13]கோழை குற்றல் குடல்விப் புருதியும்
ஆளை யறிந்தங் காவின்மோ ரதனில்
நாளும் பனைவெடை நயந்து கொடுக்கப்
[14]பள்ள விப்புருதி பதின்மூன்று சயமும்
கொள்வீர் ஆறு பத்திரிச் சாற்றில்



[15]உள்ளி யுசிலம் பட்டையின் சாற்றில்
கொள்வீர் சுவாசங் குலைகுலைந் தோடும்
[16]சத்தி குன்மம் தகரைச் சாற்றில்
[17]†அத்தி குன்ம மாமனைக்கு நெய்யில்
[18]வாயு குன்மம் வல்லாரைச் சாற்றில்
[19]பித்த குன்மம் புளியாரைச் சாற்றில்
[20]எரி குன்மத்துக் கிளநீர் சிரகம்
உரிநெய் யதனி லூற்றிக் கொடுத்திடு
[21]எரிவலி குன்மம் ஏரெண்ட நெய்யில்
கருதிய குழம்பு காசெடை கொள்க
[22]பயித்திய குன்மம் பழம்பா சியுமோர்
நயந்து குடிக்க நலமா மன்றே
[23]அண்டவா தம்வெள் ளாட்டுப்பால் எண்ணெய்
[24]பண்டியிற் பொருமல் பக்க சூலைக்கும்
உண்டிடு பசுநெய் யுரிபால் சர்க்கரை
[25]குண்டிகை நோயுங் குலைவலி யெரிச்சல்
துப்பரி யெண்பதுஞ் சுக்குடன் மிளகு
[26]திப்பிலி சர்க்கரை சேர்த்துக் கலந்துணா
நாடா கண்ட வாதமும் வாயுவும்
ஆடா தோடை யறுகா மெண்ணெய்
தின்னத் தியால்பால் சேர்சர்க் கரையில்
ஆண்டிய குட்டம் அனைபதி னொன்றும்
கண்ட சர்க்கரை காய்ச்சிய நெய்யிலும்
உண்டிட வெட்டின வாயுக்க ளொதுங்கும்
சூதகவாயு சுக்கு நீர் சிரகம்
சதுடன் பறங்கித் தோற்றாள் நெய்யில்
சூலையி ரொன்பதுஞ் சுகமாய்த் தீரும்
சுருளி சுக்கு மிளகுபி ரகத்தில்
தேறிய குழம்பு காசெடை தின்றால்
பாரிய சூசிகா வாயு பறந்திடும்
மூல முளைக்கு முலைப்பா லெண்ணெயில்
கர்லங் கண்டு கழந்திடத் தீரும்
மூலவாயு மூயிரண்டு மோடப்
பாலுநெய் மோரிற் பரிகரித் திடலாம்
ரத்த மூல நற்நெய் யதனில்

பா. பே. †அட்டகுன்மம்

உற்ற பசப்பா லோர்கழஞ் சிடலாம்
மூல கிராணி மூக்கு வலிக்குப்
பாலுநெய் மோரிற் பரிந்திடத் தீரும்
சீ மூலங்கள் சிறுகக் கழிந்தால்
செம்மறிக் கொழுப்புடன் சேர்த்து நல்ல
தாலம் பதிலை தான்கழஞ் சிடலாம்
மூலக் கடுப்பு முளைகள் விழுதலும்
ஞாலக் கோழி யூர்ந்தைகள் போலும்
தாமரை மணிபோற் றூன்முளை விழுதலும்
ஆமை யுண்டிபோ லவைமுளை கரையக்
கண்டு நிலைப்புகை காட்டத் தீரும்.
தண்டதி லான தாரைச் சிலந்திகள்
பண்டா சனவாய்ப் பவுத்திர நோயும்
கண்ட மாலை கழுத்திற் கழலை
தொண்டைச் சிலந்தி தொப்பூழ்க் கழலை
அண்டிய மார்பி லாணிச் சிலந்தி
பெண்கட னத்திற் பிறக்கும் புற்று
மூலங்க ளேழு முதலிற் பிளவை
சிலைப் புகையின் திரியிற் தீரும்
அரையாப்பு வாழை யாகுஞ் சிலந்தி
பச்சைப் புண்கொடி பாதசக் கரமும்
படுவன் சிலந்தி பழப்புண் ணேழும்
ராஜப் படுவ னாதும் விரணம்
ஏறுஞ் சிலந்திக ளெண்பத்து நான்கின்
றிதினை யகற்றுஞ் சிலைகாரப் புகை
மூக்குநீர்ப் பாய்ச்சல் முகவாத சந்நி
நாக்கச் சரங்கள் நற்பல் லரணை
பாரச் சளிகள் பற்குற்று ரோகம்
மண்டைவிப் புருதி மகத்தாம் நோய்கள்
அண்டிய பிரசு மனையிரு நான்கும்
கபால சூலை கன்னக் கிரந்தி
தீர்க்குஞ் சிலையி லெருக்கம் பாலை
வட்டி யுலர்த்திக் குழம்பைத் திரட்டித்
திரியாய்த் திரித்து நிம்பநெய் தோய்த்து
நெருப்பிற் கொளுத்தி நின்றிடு புகையை
நாசியி லேற்ற நவின்ற நோய்கள்



தீருமே நல்ல கௌசிகன் குழம்பால்
விழுவாய் போல வெறுவலி கண்டு
மலசல மடைத்து வாதை மிகுந்தால்
நலம்பெற வேலிப் பருத்திச் சாறு
அரைக்கறண் டியினி லான குழம்பு
சிறுகுன் றியெடை திறமுடன் குழைத்துப்
பருக வியாதி பறந்தே போகும்
கூறிய குட்டக் குறையது தீரச்
சர்க்கரை நொச்சிச் சாற்றுண் பூசு
எல்லாக் குட்டம் ஈரொன் பதுவும்
தில்லைப்பூ வெல்லம் சேர்த்தரைத் துணலாம்
மலசல மடைத்து மரத்த வர்கள்
தலைமயிர் சுட்ட சாம்பலிற் கொளலாம்
காமாலை சோகை கனத்த மகோதரம்
ஆமணக் கின்னெ யாடுகோ லின்னீர்
அதனுடன் செய்யுந் திரிபலைத் தூளும்
அதனெடை மூன்று வகையது குழம்பு
விதமுடன் வராகன் விரும்பிய வெடைகொடு
பதனமா யுண்ணப் பறந்துகெட் டோடும்
பாண்டு காமாலை பன்னிரு வகையும்
ஆண்டு நோயாக [illegible]
மீண்டுங் கடுக்காய் வெருகடித் தூளுடன்
நீண்ட குழம்பு நிறுத்துணைக் கழஞ்செடை
பூண்ட விடநோய் போமென் றுரைத்தார்
வலிப்புச் சந்நிகள் வளரு மங்குகள்
சலித்தே யோடத் தழுதாழைச் சாற்றில்
சருவ வாதஞ் சந்தாகு லைக்குச்
சிறிய தழுதைச் சிறுநீ ரூட்டலாம்
எண்பது வாயு இதமுடன் தீர
அன்புடன் தழுதை யதனது பாலில்
தென்புட னுண்ணத் தீர்ந்திடு முடனே
ரோக சந்நி நோய்பதின் மூன்றும்
ஏகவிஞ் சிச்சா றிதமுறு சுக்குநீர்
இன்னும் வலிப்பு மிறுங்கொறுக் குளவும்
முன்னகன் றோடு முருக்கிலைச் சாற்றில்
இழைத்தவ னக்க வெறிசரி நாய்க்கடி.

அரணை செய்யா னரிக்கடி புழுக்கடி
எரியளி நீரளி பொன்னளி பூவளி
சிறுவளிக் கடியுடன் சிலவிடக் கடிகள்
ஐய விடங்க ளறுபத்து நான்கும்
மைபோற் கறுத்த வழலை செம்மூக்கன்
கொம்பேறி மூக்கன் கொடிய விரியன்
வம்புறு நாக மண்டலி புடையன்
தீண்டிய தேசிறு பயற்றி னளவு
உருட்டுக் கலிக்க முட்கு மருந்து
எருக்கிலைச் சாற்றி லிதமுடன் கொடுக்கப்
பறக்குமே விடங்கள் பறவை போலவே
விரிதலை நாகம் விடமது தீண்டிடின்
பரிவுடன் வேலிப் பருத்திச் சாற்றில்
கண்ணிற் கலிக்கக் காலைத் தளவு
உண்ணக் குழம்பு பொருகுன் றியிலே
திண்ணாம் விடங்கள் சீர்குலைந் தோடும்
கலிங்க மதனாற் கண்வா தைப்பவர்
சொலிக்கற் றுழைச் சோற்றை யொற்றிடு
உண்ட குழம்பால் வயிறு கடுக்கின்
திட்டமா மோருஞ் சிறுகீரை யாகிரைப்
எந்த வியாதிக்கும் [illegible] வேண்டாம்
வந்த வியாதி மதிகெட் டோடும்
கடுத்தா விருநாள் கழித்துக் கொடுத்தால்
வியாதிகள் துன்பம் விலக்குங் குழம்பிதை
விண்ணோர் செப்பிய வியாதி தெரிந்து
கைப்பா கத்தைக் கண்டநு பானம்
செப்ப வுடனே தீர்ந்திடு நோயெலாம்
குருமொழி மறவாக் கூறினோம் நன்றாய்க்
கற்றோர் பெரியோர் காலினில் வணங்கி
உற்றவர் சொல்லை யுண்மையா யறிந்து
நற்றவ ரோடே நயந்தநு பானத்
தற்ற குழம்பு மூட்டப் பலிக்கும்
தேள்கடி வாயிற் சிறுகப் பூசிட
வாள்கடி போல வருநடக் காலி
காலிற் பணவெடை நன்றாய்த் தேய்த்துக்



கூவிய வெந்நீர் கொடுத்திடத் தீரும்
சோளப் பயிரால் சொக்கிய மாடு
மீள வேலிப் பருத்திச் சாற்றினில்
ஆண்மைக் கழஞ்செடை யன்புடன் கொடுக்கக்
கொள்கை நிதானங் கொடுத்திடத் தீரும்
நாற் காலுள்ள சாதிகட் கெல்லாம்
எந்த நோய்க்கு மிம்முறை யாக
மைந்தரே கேளீர் மனித ரெவர்க்கும்
உண்மையாய்ச் சொன்னோ மொருகுழம் பதனைக்
குருவரு ளாலே கூறினோ நன்றாய்
வரமிகு கௌசிக மாமுனி தானே.

(க-ரை) இவ்வகவல் கவுசிகர் குழம்பென்றும் கவுசிகர்மை யென்றும் சொல்லப்படுகிறது. இஃதன்றி இக்குழம்பின் கடைசி அடியாகிய 215-ஆம் அடியில் "வரமிகு கௌசிக மாமுனிதானே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டையும் நோக்கி இம்மெழுகு கவுசிக முனிவர் செய்ததென்று சொல்லுகிறார்கள். ஆனால் இம்மெழுகு தவிர வேறோர் மெழுகாவது வேறோர் நூலாவது இம் முனிவர் செய்ததாகக் காணப்படவில்லை. இவர் மருத்துவராயினரு மாகார், மருத்துவருமாகார். ஆகையால் இம்மெழுகு கௌசிக முனிவரால் செய்யப்பட்டதென்னும் வழக்கு ஒப்பக்கூடியதாகாது.

அன்றி, இக்குழம்பைப் புதுச்சேரி முதலிய சில ஊர்களிலுள்ள மருத்துவத் தொழிலினர் "சவுரியார் குழம்பு" என்கிற பெயரால் கையாடுகின்றனர்.

இவ்வாறிருத்தலால் இந்தப் பேர்களை ஒருவாறு ஒழித்து "கௌசிக பலம்" என்னும் பேர் தேங்காய்க்கு வழங்கப்படுதலின், அத்தேங்காய் ஓட்டுக்கரி இதில் சேர்க்கப்படுதலின் "கௌசிக பல குழம்பு" என்று இதற்குப் பெயர் இருத்தல் வேண்டும். பிறகு பலம் என்பது விடப்பட்டு "கௌசிக மெழுகு," "கௌசிக குழம்" பென்று வழங்கி விட்டதாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

இதைப்போலவே தேங்காய் ஓட்டுக்கரி சேரும் மற்றொரு மெழுகு "திரிநேத்திர மெழுகு" அல்லது "திரிநேத்திரமை" என்னும் பெயர் வழங்குவதையும் காணலாம். திரிநேத்திரம் என்றால் மூன்று கண்கள்; அம்மூன்று கண்களை உடையது தேங்காய். அதன் ஓட்டுக்கரியை அதில் சேர்க்கிறார்களாதலால் அம்மெழுகை "திரிநேத்திரமை"

என்று வழங்குகிறார்கள். இதற்குத் தமிழில் முக்கண்ணான் என்று பெயர். இதை:—

"முக்கண்ணான் கண்களைந் ததில்வஞ் சாங்க
முருங்கியபால் மூட்டெருவில் மூடி வைத்து
மக்கினபின் னெடுத்ததைத் தகினோடாக
மஞ்சமந்த வாசுகியை மத்திச் சேர்த்துச்
செக்கணையு மிருநாழி வெண்ணெய் விட்டுத்
தியாக்கி வெந்தபின் சிக்கை நீக்குண்
தக்கவரன் பதியெடுத்தோ னகர்தி யிட்டோ ங்
தங்கைகளுந் தினந்திருந் தரிக்கத்தானே"

என்னுஞ் செய்யுளாலறிக.

## ஆராய்ச்சி விரிவுரை

சகலமும் படைத்தோர்-இயங்கியற்பொருள், நிலையியற் பொருள்களில் அடங்கிய யாவற்றையும் உண்டாக்கினவராகிய; சருவேச்சுரனர்-எப்பொருளுக்கும் மேற்பட்ட இறைவனார்; அரு-உயிர்களுக்கு அருமையாயிருக்கின்ற மறை-மருந்து மறையாக; பொருளால்-பல சரக்குகளைக் கொண்டு; யாவரும் பிழைக்க-உலகத்திலுள்ள ஐயறிவுள்ள மன்பதை பிழைக்குமாறு; குருமுறையான-குரு பரம்பரையாக சொல்லப் பெற்றும் செய்யப் பெற்றும் வந்த; குழம்பின் குணத்தால்-இக்கௌசிக குழம்பின் தன்மையால்; (அதை) திரு அருள் என்று செப்பிடும் பேர்க்கு-இறைவனுடைய திருவருளே இதுவாம் என்று செப்புகையாளருபவர்க்கு; இருவினை-நல்வினை, தீவினைகளால் உண்டாகின்ற; காலாயிரத்து நாலாறோடு உறுநாற்பத்தெட்டு-காலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு என்னும் எண்ணிக்கையிலடங்கிய; உயர்பிணி தீர-உயர்ந்த நோய்கள் நீங்குமாறு; சிறுவர்க்கு உதவி செய்தனர்-மருத்துவர்களுக்கு சொல்லி வைத்தார் (எ. று.) அன்று எ அசைகள்.

(பொ-ரை) இயங்கியற் பொருள், நிலையியற் பொருள்களில் அடங்கின எல்லாவற்றையும் பண்டுதொட்டே படைத்து வருபவரான எல்லாம் வல்ல இறைவன் மருந்து மறைகளாக மருத்துவ மாணவர்களின் வழியாக மன்பதைக் குண்டாகும் நோய்களைத் தீர்த்து உய்வி[illegible]பை சொல்லி வைத்தார்.

218667
சென்னை-600 008

# 1943-ம் ஆண்டு
# தமிழ் மருத்துவப் பொ
## மூன்றாவது மலர்

## பொருளடக்கம்

| தலைப்பு. | ஆக்கியோர் பெயர். | பக்கம். |
|---|---|---|
| கடிதம் | | 1 |
| கண்ணோய்கள் அணுகா நெறிகள் | கோ. துரைராசன் | 2, 12 |
| தாவரப் பொருள்கள் | டி. எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை | 4 |
| ஒப்பு நோக்கு | | |
| சுழல்வண்டெரிதல் | ரு. தி. | 8 |
| நாகப்படலம் | ,, | 9 |
| மயிர்புழுவெட்டு | ,, | 17 |
| அமரம் | ,, | 25 |
| குவளைவிப்புருதி | ,, | 36 |
| வெள்ளெழுத்து | ,, | 45 |
| முடமயிர் | ,, | 64 |
| தூர்மாமிச வளர்ச்சி | ,, | 65 |
| செப்பு | ஆர். தியாகராஜன் | 10, 20, 26, 40 |
| பல் நோய் | நா. சுப்பிரமணியம் | 13, 18 |
| நவரைக்கிழி | C. D. | 23 |
| கண்ணோயும் காற்றுக் காலமும் | டி. எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை | 31, 37 |
| ஐந்தாம் ஆண்டு எல். ஐ. எம். சோதனை | | 35 |
| அனுபவமுறைகள். | | |
| திப்பிலியாதி ரசாயனம் | | 43 |
| நாவல்நெய் | | 43 |

| | | |
|---|---|---|
| 1943-ம் ஆண்டு எப்ரலில் எல். ஐ. எம். சோதனையில் தேறிய சித்தமாணவர்களின் பெயர்கள் | | 44 |
| நாடி | மா. வடிவேலு முதலியார் | 46, 55 |
| முத்து | ஆர். தியாகராஜன் | 49, 59 |
| இரசம் | மா. வடிவேலு முதலியார் | 66, 75 |
| கருவங்கம் | ஆர். தியாகராஜன் | 70, 81 |
| குளிர்சுரம் | எஸ். சுப்பிரமணியம் | 85 |
| வெள்வங்கம் | ஆர். தியாகராஜன் | 89, 10 |
| விண், நெருப்பு, மண், நீர் என்னும் இவற்றின் செயலொழிவால் இறப்புணர்தல் | மா. வடிவேலு முதலியார் | 95 |
| கரு அழிதல் | கோ. துரைராசன் | 98 |
| கரு அழிதலுக்குப் பரிகாரம் | கோ. துரைராசன் | 110 |
| பொங்கல் வாழ்த்து | | 103 |
| தமிழ் மருத்துவப் பொழிலின் தொண்டு | | 104 |
| மண்டூர மாத்திரை | கா. நாகையா | 105 |
| பூரம் | ஆர். தியாகராஜன் | 106 |


## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 8 | பருதி | பரிதி |
| 13 | 18 | நல்வாயும் | நல்வாய் |
| ,, | 20 | முதேவி | மூதேவி |
| 30 | 9 | முனிந்தன ளிகவி | முனிந்த, னளிகவி |
| 43 | 3 | திப்பிலாதி ரசாயனம் | திப்பிலியாதி ரசாயனம் |
| 70 | 11 | கிடப்பது | கிடைப்பது |